# இந்துசாதனம்.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரிக் கிரயம்.**

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: | ஆ 1-க்கு | ரூ. 5-60 |
| வெளியூர், இந்தியா: | ,, | ரூ. 9-40 |
| கொழும்பப்பகுதி: | ,, | ரூ. 9-40 |
| தனிப்பிரதி: | | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:—ஒருகலம் | | ரூ. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரூ. 5-00 |
| ,, | கால்கலம் | ரூ. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு மேற் விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினாலன்றிக் கவனிக்கப்படா.

(1889)

புத்தகம்—௩௭ } யாழ்ப்பாணம்:—குரோதன௵ புரட்டாதி௴ ௨௩ உ; (1925 அக்டோபர் 8) வியாழக்கிழமை. { இலக்கம்—௨௭


உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது னாங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## இனும் காலண்டர் இனும்.

எங்களிடம் கட்டி வெள்ளியிலும் 1-ம் நெ. 2-ம் நெ. வெள்ளியிலும் மிச்சம் அப்புரவாக வேலைமுடித்த முரசுகுத்தி செங்காதரக்கொடி கைகோர்வை, முகப்புக்கொடி, காஞ்சி ஆரைஞாண்கொடி, கால்தண்டை, கொலுசு, வளைகளும் கடயம் கங்கணம், மயிர்மாட்டி, ஒட்டியாணமும், இமிடேசன் செகப்பு கம்மல் தோடு கடுக்கண் மோதிரங்கள் இன்னும் இதரவெள்ளி தங்க நகைகளும் பட்டுபருத்திமுதலிய ஜவுளித் தினுசுகளும் விலைகள் சகாயம். விலாசம் தெரிவித்தால் பிரைஸ்லிஸ்டு அனுப்புகிறோம். சுபம்

தோ. வே. சென்னிசெட்டி & சன்ஸ்
சராப். ஜவுளி வியாபாரம்
குகை, சேலம்,
தென்-இந்தியா.

(H. 41.)

## இனும்! காலண்டர் இனும்!!

எங்கள் கம்பெனியில் கட்டி வெள்ளிச் சாமான்களும், நெ. 1-ம், நெ. 2-ம் வெள்ளியாலும் மிச்சம் துப்புரவாக வேலை செய்த முரசு குத்தி கெங்காதரக் கொடி, கைக் கோர்வை முகப்புக் கொடி, காஞ்சிக் கொடி, கால் தண்டை, செயின்கொலுசு, இன்னும் காலிற் போடும் சாமான்களும், மயிர்மாட்டி, கடயம், ஒட்டியாணம் மோதிரம், புஜச்சிகப்புக் கம்மல், தோடு, கடுக்கன், சிகை வயிரக்கம்பி சட்டங்கள், ஜவுளி பட்டும் பருத்தியும் கலந்த சேலை, சோமன், இன்னும் வேண்டிய சாமான்களும் இருக்கின்றன. தாங்கள் விலாசம் தெரிவித்தால் கிரயஜாபிதா அனுப்புகிறோம்.

நா. பிளே செட்டி அன கோ.,
சரூப் ஜவுளி வியாபாரம்,
குகை, சேலம்,
தென் இந்தியா.

(H. 39.)

வீ. ஸாமி. அய்யங்காருடைய

## அறைக்கீரைவிதைத் தைலம்.




பித்த மேகசீரானது சிரசுக்கேற அதனாற் கண்மறைப்பு, கண்ணெரிச்சல், கண்புகைச்சல், கண்ணிலிருந்து நீர்வடிதல், ஒருதலைவலி, இருதலைவலி, பீனிசம், காதினால் சீழ்வடிதல், காது இரைச்சல், காதுவலி, ஐந்துவருஷத்திற் குட்பட்டதாயும் இரைச்சலோடு கூடிய காதடைப்பு, கரப்பன், தேமல், சிரசில் மயிர் உதிர்தல், கொண்டுவிழுதல் முதலான ரோகங்களை நிவர்த்திப்பதுமன்றி மயிரை நன்றாய் வளரச்செய்யும் இந்த கோட்டாவில் காணப்படாத கழுத்திற்குமேற்பட்ட சகல வியாதிகளையும் அநுகூலப் படுத்தும், மேற்கண்ட வியாதியில்லாதவர்கள் தேய்த்து ஸ்நானம்பண்ணினால் தேகத்திற்குக் குளிர்ச்சியையும் ஆரோக்கியத்தையுங் கொடுக்கும். வாரத்திற்கு இரண்டுதடவை காலை 8 மணிக்குள் வெந்நீரில் சீயக்காய்தேய்த்து ஸ்நானஞ்செய்து யாதொரு பத்தியமுமின்றி உடனே போஜனஞ் செய்து கொள்ளவேண்டும் 8 நாள்வரையிலும் சுகந்தம் மாறாது அன்று பகலில்மாத்திரம் தூங்கக் கூடாது. 10 பலங்கொண்ட புட்டி 1-க்கு கிரயம் ரூபா 1—10—0. 'பாக்கிங்போஸ்டேஜ் சார்ஜு பிரத்தியேகம்'

விற்பனைக்கு கமிஷன் ஏஜண்டுகள் தேவை விபரம் எழுதிக்கேட்கவும்.

ஐண்பகத்தம்மாள்,
8 நம். பிராடஸ் ரோட்
மைலாப்பூர், சென்னை.

(Q. 67.)

## சுரத்தை நீக்கும் அற்புதமான மருந்து

குளிர் (குலைப்பன்) காய்ச்சல் முதலிய சகல விதமான சுரங்களையும் டக்டர் மைக்கோயின் "சுரசங்காரி" ஔஷதம் உடனே மாற்றிவிடும். டக்டர் மைக்கோயின் சுரசங்காரி யென்னும் மருந்து எவ்வகைச்சுரத்தையும் மந்திரவசத்தால் மாற்றுவதுபோல உடனே மாற்றிவிடுகின்றது. மற்றும் வைத்தியர்களினால் மாற்றமுடியாத நெடுநாட்பட்ட எவ்வகைச்சுரமும் இந்த மருந்தில் நாலு மூன்று போத்தலை உபயோகிப்பதனால் முற்றாக மாறிவிடுகின்றது. ஒருமுறை பரிட்சித்துப் பாருங்கள். ஒருபோத்தல் கொண்ட மருந்தின்விலை ரூபா 1 சதம் 50. இம் மருந்து கொழும்பு கார்ஜில்ஸ் (Cargills Ltd.) கம்பனியிலும் மற்றும் மருந்துச்சாலைகளிலும் பெறலாம். (I. [illegible])

## சாலாமிஸ்திரி லேகியம்

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொது ஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரிக்க வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாரு, சாலாமூஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவள பஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது,

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துக்குள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை ருாத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரைருாத்தலுக்கு ரூபா ௬0. கால் ருாத்தலுக்கு ரூபா ௫ தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுவாதாரவைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்டு,
மட்டிக்களப்பு,
இலங்கை.

(M. 36.)

ESTABLISHED, 1909.

## MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
**Kairul Muslimeen Medical Hall**
**PORTONOVO** (*South Arcot Dt; India.*)

இந்த விளம்பரம்முழுதும் தாங்களும் வாசித்து தங்கள் சிநேகிதர்களுக்கும் வாசிக்கக்காண்பியுங்கள். குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்வது போல் வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

நண்பிற்சுகந்த அன்பர்காள்! நமது கம்பெனி ஸ்தாபித்த 1909-வது வருடமுதல் நாளது தேதிவரையில் கீழ் காணப்பட்ட லேகியத்தைச் செய்து இந்தியா, பர்மா, சிலோன், மலாய் முதலிய தேசயாசர்களுக் கனுப்பி ஒவ்வொரு மஹான்களாலும் பிரபுக்களாலும் பிரயோகித்து நோயற்ற வாழ்வென்னும் பாக்கியத்தை குறைவற்ற செல்வமாயடைந்து ஒவ்வொரு கனவான்களாலும் நமக்கு யோக்கிய நற்சாக்ஷிகளும் அனந்த பரிசுகளும் பெற்றுவருவது நேயர்கள் அறிந்த விஷயமேயாம். தற்கால நிலைமைக்கேற்றுப்போல் அனந்த பொய்வசனங்களை விடுத்து புதிது புதிதாக இத்தகைப்போன்ற குருவிலேகிய மென ஓர் நாமஞ் சூட்டி பத்திரிகை நோட்டீஸ் மூலமாய் வெளியிட்டிருக்கும் போலி மருந்துகளை நம்பிக் கையாண்டு பொருள் நஷ்டமும், மனக்கஷ்டமும் கொள்ளாது நீடியகாலத்து அநுபவ முத்திபெற்ற உண்மையான மருந்துகளை பூர்வமுடைய யோகவான்கள் உணர்ந்து தருவித்து அருந்துவீர்களாக.

இதுவே அசல் பாகமுள்ளது! ஒருவருமிகழ்ந்து பேசாதது!!

உத்திரவாதமுள்ள

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்

இச்சிறந்த இராஜ ஔஷத லேகியமானது முற்காலத்து மன்னர்களால் உபயோகித்துப் பிரசன்னமாய்ப் புகழ்ப் பெற்று வீரியசக்திக் குறையாது இல்லறத்தின் இன்ப வாழ்க்கையையடைந்து புத்திர பௌத்திர சம்பன்னராய் நீடூழிவாழும் பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், சோர்விலாத தைரியத்தை உண்டாக்கக் கூடியதுமான ஒப்பற்ற ஓர் புருஷ சஞ்சீவியாகின்றது. இச்சிறந்த அபூர்வ குண லேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனுக்குடன் அறியவேண்டியதென்றே ஜனானுகூல நன்மைக்காகவே இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றோம். மற்ற விவரங்களை நமது கேட்லாக்கில் காணலாம்.

**மேற் லேகியத்தின் முக்கிய குணமாவது.**

வாதபித்த சிலேத்ம மிகுதிக் குறைவால் ஏற்படும் இரத்தக் குறைவு எழுவகை தாதுக்களின் பலஹீனம் கல்தி, வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீர்சுருக்கு, நீர்எரிச்சல், நீர் [illegible] பெருத்தல் [illegible] அடிக்கடி உண்டாகும் தாது நஷ்டம், சித்தசாபல்யம், Spermatorrhea, தேகமெலிவு, சதா இடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி Nervous-diseases ஆகிய நோய்களைச் சுகப்படுத்தி இரத்தத்தைச் சுத்தி செய்து புதிய மேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிட சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது.

40 நாள் சாப்பிடும் பெரிய டப்பி 1-க்கு விலை ரூ. 8—0—0
20 நாள் சாப்பிடும் சிறிய டப்பி 1-க்கு விலை ரூ. 4—0—0

வி பி தபால் சார்ஜு பிரத்தியேகம் முற்பணமனுப்பினால் வி-பி. செலவு இனாமாயனுப்பப்படும் பினாங்கு, சிங்கப்பூர், மலாக்கா, கோலாலம்பூர், கிள்ளான் முதலிய Straits Settlements வாசர்களும் Federated Malay States வாசர்களும், மருந்தின் கிரமமும் தபால் செலவு ரூ. 2-ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். மேற் ஊர்களுக்கு திண்ணமாய் வி. பி, யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது மேற் குருவியின் சத்தால் செய்யப்படவில்லை யென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லை யென்றுவது அல்லது சில போலியர்கள் ஆயிரக்கணக்கான ரூபாய்களை சபதங்களா கூறி கொண்டு பத்திரிகை வயிலாய் வெளிவந்த இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குண முண்டென்றுவது அல்லது இந்த அபூர்வ குண லேகியத்தைச் செய்து காட்டினலாவது, கடவுளுக்குப் பொதுவாய் சத்தியமாய் ரூபிப்பவர்களுக்கு அவர்களால் கூறிய சபதங்களின் தொகையும், நமது கம்பெனியால் ரூ 1000 இனாமாயும் சேர்த்துக் கொடுக்கப்படும். அப்படியே ரூபித்தும் இனாமுடைய பணத்தைக்கொடுக்கத்தவறினால் கோர்ட்டு மூலமாகவசூல் செய்துக்கொள்ளலாம். ஆர்டர்செய்யும் நேயர்கள் இப்பத்திரிகையின்பெயரைக் குறிப்பிட்டெழுதவும்.

என் மேல்விலாசம்:—

Tel. Address:—
Kader Brothers
PORTO-NOVO

மெஸ்ஸர்ஸ ஏ. எஸ். எம். ஏ. காதர் பிறதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை,
தென்னாற்காடு ஜில்லா.

(Y. 38)

## புதிய தினுசுகள் சகாய விலைகள்

நூதனமான பட்டு ஜவுளிகள்.

எங்களிடம் தற்காலம் நாகரிகத்திற்கேற்ற பனாரிஸ், பெங்களூர், சேலம், கோயம்புத்தூர், கொர்னாடு, காஞ்சீபுரம், கும்பகோணம், தஞ்சாவூர், பாடிப்பேட்டை, பட்டணம், பாரிஸ் பட்டு முதலிய தினுசுகளில் சுத்தமான பட்டுச்சேலைகளும் ஜரிகைநூல் சேலைகளும், பட்டுச்சரிகைச் சால்வைகளும் தினுசுகளும் தயாராயிருக்கிறது.

ஒருதடவை வாங்கிப் பார்த்தால் அதின் நயம் தெரியும். வெளியூர் ஆடர்கள் வி. பி மூலமாக அனுப்பப்படும்.

பி. ஆர். அனந்தநாராயணய்யர்,
ஜவுளி வியாபாரம்,
205, செட்டித்தெரு,
கொழும்பு.

P. R. Ananthanarayana Iyer,
Silk & Cloth Merchant,
205, Sea Street,
COLOMBO.

(Y. 39).

## "சேலம் பனியன்கள்."

உறுதியானது விலைசரசம்.
நாட்பட உழைக்கக்கூடியது,
வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.
தேவைக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

ருயல் நிட்டிங் பேக்டரி,
செவ்வாய்பேட்டை, சேலம்.
S. இந்தியா.

(H. 40)

## தேக்கமரம்.

புதிதாக வருவிக்கப்பெற்ற திறமான தேக்க மரங்கள்; நீளம் 6 அடிதொடக்கம் 30 அடி வரையிலுள்ளன. கனம் 10 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம்வரையிலுள்ளன. நீண்ட மரங்கள் குறைவாயிருப்பதினால், எம்மிடம் வழக்கமாயெடுப்பவர்கள் தங்கள் ஆடர்களை ஏற்கனவே செய்துகொள்ளவேண்டியது.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானாறு,

தந்திவிலாசம்
வ பி. வல்லுவெட்டித்துறை.

(H. 37.)

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— குரோதன ௵ புரட்டாதி ௨௰௨ வியாழக்கிழமை.


## கொழும்பிலுள்ள புராதன சிவாலயம்—௨.

சட்டநிருபணசபைக் கூட்டத்திலே தமிழ்ப் பிரதிநிதிகள் எண்மர் வீற்றிருந்தனர். அவர்களுள்ளும் சைவசமயக் கொள்கைகளை நன்கு உணர்ந்தவர் அறுவர் இருந்தனர். மேல்மாகாணத் தமிழர் பிரதிநிதியும் அங்குச் சமுகமாயிருந்தனர். ஆலய விஷயங்களை நன்குணர்ந்தவரும் அறப்பழுத்ததேசாபிமானியும் கொழும்பிலுள்ள சிறந்த சிவாலயமொன்றின் தருமகர்த்தாவுமாகிய கௌரவ ஸேர் பொ இராமநாதனவர்களும் அச்சமையத்தில் அங்கே இருந்தனர். இவர்களெல்லோரும் வரிசையாக இருந்தும் இல்லார்போன்றசமையத்தில், சைவநன்மக்கள்மீது கொண்ட அபிமானங்காரணமாக, இவ்வாலயவிஷயத்தை நன்கு ஆராய்ந்து அரசினரைத் தக்க சில வினாக்களை வினவிய கௌரவ மிஸ்ரர் சுல்த்தான் அவர்கட்குச் சைவர்கள் எப்பொழுதும் கடமைப்பட்டவர்களாயிருக்கின்றார்கள்

இந்தப் புராதன சிவாலயம் முற்காலத்தில் இந்தியாவிலிருந்து வந்து சேனுவீரராகக் கொழும்பிலே வசித்தவர்களால் தங்கள் வழிபாட்டின்பொருட்டு அமைக்கப்பட்டதென ஒரு ஐதிகமிருக்கின்றது. 100 வருடங்கட்கு மேற்பட ஒரு சிவலிங்கம் ஒரு ஆலயத்திற் சலனமின்றிப் பூசிக்கப்படுமாயின் அவ்விலிங்கம் சுயம்புலிங்கத்திற்குச் சமானமாகுமெனச் சாஸ்திரக்கள் கூறும். அவ்வாறான புராதனம்வாய்ந்த மூர்த்தியைத் தலத்தினின்றும் அகற்றி வேறிடத்தில் வைத்தல் நாசமாகப்போதற்கான செயலன்றி நல்லாயிருத்தற்கான செயலாகுமா!

குறித்த சிவன்கோயிலின் அதிகாரிகள் அக்கோயிலை இடித்து வேறிடத்தில் அமைத்தற்கு உடன்பட்டுக்கொண்டனரென அரசினர் பொருத்தமற்ற நியாயங் கூறுகின்றனர். ஒரு ஆலயத்தைச் செவ்வனே நடத்தாவிடினும், அங்ஙனம் நடத்தாத அதிகாரியை விலக்கி வேறு அதிகாரியை வைத்தற்குரிய சுதந்திரத்தைத் தந்திருக்கும் எங்கள் அரசினர் ஆலயத்தை இடிப்பதற்கு முற்பட்டு நிற்கும் அதிகாரியின் சொல்லைக் கைக்கொள்ளலாமா! கோயிலதிகாரிக்குக் கோயிலைச் செவ்வனே நடத்துவதற்கு அதிகாரமுண்டன்றி அக்கோயிலையிடித்தற்கும் அதிகாரமுண்டா?

யாழ்ப்பாணத்துள்ள கோயிலதிகாரி கோயிற் றிருக்குளத்தின் வசதிக்காகக் கோயிலுக்குரிய மடத்தை இடித்துவிட்டு வேறேரிடத்தில் அதனை அமைக்கும்படி அஸ்திபாரமிட்டிருப்பவும் அவர் செய்தது அடாத செயலென்று அபராதமிடப்பட்டிருப்ப, கொழும்பிலே கோயிலதிகாரி கோயிலைத்தானே இடித்து, அந்த நிலத்தை அரசினருக்கு விற்றுவிட்டு வேறு இடத்திலே கோயில் கட்ட நினைப்பது குற்றமாகாவிடின், யாழ்ப்பாணத்திற்கொரு நியாயம் கொழும்பிற்கு இன்னொரு நியாயம் என்றும், அரசினர் தமக்கொரு நியாயம் பிறர்க்கொரு நியாயம் என்றுமல்லவா நாம் நினைக்கவேண்டியிருக்கின்றது.

இச்செயல் இலங்கையிலேயுள்ள சைவரின் மனத்தைப் புண்படுத்தமாட்டாதோ வென்று கௌரவ சுல்த்தானவர்கள் கேட்டபோது அரசினர் புண்படுத்தமாட்டாதென்று சொல்லுகின்றார். இலங்கையிலுள்ள சைவர்களிடத்தில் அரசினர் இந்த விஷயமாக இதுவரையில் விசாரணைசெய்திருக்கின்றாரா? சிவன்கோயிலை யிடிப்பதே அவர்களெல்லாருக்கும் சம்மதமென்பதை அரசினர் நன்கு அறிந்திருக்கின்றாரா? கொழும்பிலிருக்குஞ் சைவர்கட்குத்தானும் இந்த விஷயம் இன்னும் பூரணமாகத் தெரியாதாமே. சட்டநிருபணசபைப் பிரதிநிதிகளுள் தமிழங்கத்தவர் பலர் இதனை உண்மையாக முந்தியறிந்தாரல்லர். இங்ஙனமெல்லாமிருப்ப, சைவர்களுடைய மனம் புண்பட மாட்டாதென்று அரசினர் கூறுவதற்கு ஆதார மென்ன? கொள்வாரும் கொடுப்பாரும் சம்மதித்துக் கொண்டாற் போதுமென்பதா அரசினர் கொள்கை? அங்ஙனமாயின் கொள்வாரும் கொடுப்பாருஞ் சம்மதித்து அரசினர் பிரமாணத்திற்கு மாறுகப் பல கருமங்களைச் செய்துவிடுவார்களே. கொள்வாருங் கொடுப்பாருஞ் சம்மதித்து அடிமைவியாபாரஞ்செய்ய அரசினர் இப்பொழுது விடுவாரா? அபின், கஞ்சாவியாபாரஞ்செய்தல் அரசினருக்குச் சம்மதமாகுமா? கோயிலுக்குத் தருமசாதனஞ் செய்யப்பட்ட காணிகளை விற்று வேறிடத்திற் காணி வாங்கத்தானும் கோயிலதிகாரிகட்குச் சுவாதீனமில்லையாமே! இப்படியிருக்க இது எப்படி முடியும்? "வல்லான் வகுத்ததே வாய்க்கால்" என்றவாறன்றோ முடியும்.

இனி, ஆயிரக்கணக்கான சனங்கள் வழிபடும்படி கொழும்பிலுள்ள தீவுச் சிவன்கோயிலுக்குப் போய்வருகின்றார்களல்லவாவென கௌரவ மிஸ்றர் சுல்தான் கேட்டபோது, இக்காலத்தில் அயலிலே யிருக்கின்ற சிலரல்லாமல் ஆயிரக்கணக்கானோர் அக்கோயிலுக்குப் போவதில்லையென அரசினர் விடை கூறுகின்றார் எனவே பலர் போய் வழிபடும் கோயிலை இடிக்க வொண்ணுது. சிலர் போய் வழிபடும் கோயிலை இடிக்கலா மென்பது அரசினர் கொள்கையா? இந்தக்கொள்கை அவர்களிடத்தி லிருக்குமாயின் யாழ்ப்பாணத்திலே அநேக கோயில்களை இடித்துவிடுதலாகுமே.

அதிகம் கூறுவதென்ன, இந்த ஆலயத்தைக் கொடுத்தற்குக் கோயிலதிகாரிக்கும், இடித்தற்கு அரசினருக்கும் எள்ளளவும் அதிகாரமில்லை. சட்டநிருபணசபைப் பிரதிநிதிகளும், கொழும்பிலுள்ள விவேகாநந்த சபையார், சைவபரிபான சபையார்களும் இலங்கையிலுள்ள சகல சமயாபிமானிகளும் இந்நோக்கத்திற்குப் பிரதிகூலமாக முயற்சி செய்தல்வேண்டும். பிருத்தானிய அரசரின் மாசற்ற புகழ் இச்செயலால் மாசடையாதபடி அவர்கள்விசுவாசமான பிரசைகளாகிய நாங்கள் பார்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

நிற்க, கொழும்பிலுள்ள இப்புராதன சிவாலயத்தின் வரலாற்றையும் இப்பொழுது யாருடைய பரிபாலனத்தில் அவ்வாலயம் அகப்பட்டிருக்கின்றதென்பதையும் கூடிய வரையில் விபரமாக எமக்கு எழுதி அனுப்புபவர்களிடத்து மிகவும்நன்றிபாராட்டுவேம்.

---

## ஏகாதசிவிரத மகத்துவம்.

### உருக்குமாங்கதன் ஏகாதசிவிரதம் அநுட்டித்தமை.

(முற்றொடர்.)

வேட்டையாடும்பொருட்டுக் காட்டின்கண்ணே சென்றிருந்த உருக்குமாங்கதன் அக்காட்டிற் சஞ்சரிக்கும் சிங்கம், புலி, யானை, கரடி, பன்றி யாதியாம் மிருகங்களைக் கொன்றபின், ஆங்குள்ள ஒரு பூஞ்சோலையிலே தங்கியிருந்தான். மோகினி வடிவங்கொண்டுவந்த உருப்பசி தன்னுடைய அழகிய கரத்திலே யிருந்த யாழை மீட்டிக் குயிலும் நாண, பட்ட மாமரங்களுந் தழைக்க, கல்லும் உருகக் கர்ணாமிர்தமென்னப் பாடினள். கானத்தின்னுசை உருக்குமாங்கதனுடைய காதிற் படுதலும் அவன் ஆச்சரியவயத்தனாய் அச்சோலையின் நாற்புறமும் பார்த்தான். செங்கமலத் திருவனைய செவ்விவாய்ந்த மங்கையொருத்தி செங்கையில் யாழைத்தாங்கி அங்கு நின்று பாடுவதை அரசன் கண்டான்; அற்புதமடைந்தான். "கானகத்தின்கண்ணேயுள்ள இப்பூஞ்சோலையிலே தன்னந்தனியே வந்து நின்று கானஞ்செய்து என் காதிற்கும் கண்களுக்கும் ஆமிர்தத்தை யூட்டிநிற்கும் இயமலவிநல்லாள் யாவளென அறிகிலேன்; இப்பெண்பாவை,

"திரைசேர் கடலிற் பிறந்துவந்த திருவோ! தருவோ ரைந்தவளர், உரைசேர் பசும்பொனுலகுதனில் உள்ளாள் தொல்லோ! உவரிவனை, தரைசேர் மாதோ! காதுகண்ணோர் தலஞ்சேர் நாகர் தலத்தாளோ!, வரைசேர் சாரல் வரையில் அரமகளோ!" என்ன மனம் மருண்டான்.

உருக்குமாங்கதன் அம்மங்கைக்குச் சமீபமாகச் சென்று "பெண்கள்நாயகமே, நீ யார், உன் நாமதேயம் யாது, இங்கு தன்னந்தனியே வந்த காரண மென்ன, நீ என் காதற்கிழத்தியாக என்னுடனிருப்பாயாயின் எனனிடத்துள்ள செல்வமனைத்தையும் உனக்கே உவந்து அளிப்பேன்; எனது அந்தப்புரத்துள்ள மகளிரெல்லாம் உன் குற்றேவலே புரிந்துநிற்பர்" என்றான். அரசன் இயம்பிய வார்த்தைகளைக் கேட்ட உருப்பசி சிறிது நாணுவாள்போன்று பூமியைப் பார்த்தபடியே "மகாராசாவே, எக்காலத்தும் என் சொற்றவறுது நடப்பதாக நீர் வாக்களித்தால் யான் உம்முடன் வந்து வாழ்வேன்; சொன்ன வார்த்தையினின்றுந் திறம்புவீரேல் அந்த க்ஷணமே யான் உம்மைப் பிரிந்து செல்வேன்" என்றனள். அப்பொழுது வேந்தன் "பெண்ணாமிர்தே, கிழக்குத் திசையில் உதயஞ்செய்யும் எங்கள் குலத்தலைவனாகிய சூரியன் தன்னெறியினின்றுந் திறம்பி மேற்குத் திக்கில் உதயஞ் செய்ய நேர்ந்தாலும் யான் சொற்றவறுது உன் விருப்பப்படி நடப்பேன்; இது சத்தியம்" என்றான். உருப்பசி அரசனுடன் அயோத்திபாபுரிக்குச்செல்வதற்கு உடன்பட்டாள். அரசன் அவளைத் தந்தச் சிவிகையின்மீது ஏற்றித் தன்னகருக்கு அழைத்துச் சென்றான்.

சென்றவேந்தன் தன்இனிராச்சியபாரம் முழுவதையும் தனது புதல்வனாகிய தன் மாங்கதனிடம்சமர்ப்பித்துவிட்டு, அவனை நோக்கி, "மகனே, மாசந்தோறும் ஏகாதசிவிரத தினத்தை நமது நாட்டிலுள்ள ரெல்லாருக்கும் முரசறைவித்துத் தெரியச் செய்குதி" என்று கூறி உருப்பசியோடு இன்பந் துய்த்துக்கொண்டிருந்தான்.

இவ்வண்ணம் நெடுங்காலங் கழிந்ததன் பின் ஒரு தினம் அதிகாலையில் உருப்பசி அரசன் அருந்தும்படி வெற்றிலை பாக்கை அவனுக்கு நீட்டுதலும் அவன் அவற்றை ஏற்றுக்கொண்டான். உடனே ஏகாதசி விரதத்திற்காக அடிக்கப்படும் முரசின் ஒலி அரசன் காதிற்பட்டது. அவன் தான் வாங்கிய தாம்பூலத்தை அருந்தாது மீட்டும் உருப்பசி கரத்திற் கொடுத்தான். உருப்பசி அதனை வாங்க மறுத்து "அரசே, நான் தந்த தாம்பூலத்தை இப்பொழுது நீர் அருந்த மறுத்தமைக்குக் காரணமென்ன" எனவும், அரசன், 'பெண்ணே, இன்று ஏகாதசி விரத தினமாம், ஆதலால் யான் தாம்பூல மருந்தேன்" என்றான். "விரதநினமாயினும் யான் தந்த தாம்பூலத்தை நீர் அருந்தவே வேண்டும்" என்றாள் உருப்பசி. "என்னுயிர் போக நேரினும் இவ்விரத தினத்திலே தாம்பூலம் அருந்தேன்" என்றான் அரசன். "உம்மைப்போன்ற உத்தம குலத்துதித்த அரசர் சத்தியத்தினின்றுந் திறம்பலாகுமா? உமது முதாதையாகிய தசரதச்சக்கரவர்த்தி தமது சத்தியத்தைக் காக்கும்பொருட்டன்றோ தன்னுயிர் விடுத்தார்; நீர் எனக்கு அளித்த வாக்கை மறந்துவிட்டீரா? இங்ஙனஞ் செய்வீராயின் யான் உம்மைத் தனந்துசெல்வேன்" என்று உருப்பசி யுரைத்தாள். அது கேட்ட அரசன் "பெண்ணே, பரக்கப் பேசுவதால் வரும் பயன் யாதுமில்லை; யான் ஒருபோதும் ஏகாதசி விரதத்தை விடமாட்டேன்; விரதம் முடிந்த பின் உன் சொற்படி நடக்கின்றேன்; அங்ஙனமின்றி என்னைப் பிரிந்து செலவது உன் கருத்தாயின் நீ செல்லலாய்" என்றான். அது கேட்ட உருப்பசி சினமுற்றவளாய் அவ்விடத்தினின்றும் அகன்று தான் உருக்குமாங்கதனை முன் சந்தித்துள்ள அந்த வனத்தை நோக்கிச் சென்றாள்.

---

## உலகம் பலவிதம்.

"மகனே, உனக்குச் சனி சுகமாயில்லையென்று நேற்று இங்கே வந்த சாஸ்திரியார் உன் சாதகம் பார்த்துச் சொன்னார்; ஆனபடியால் இன்று புரட்டாதிச் சனிக்கிழமை; எண்ணெய் வைத்து முழுகிவிட்டுக் கோயிலுக்குப் போய் எள்ளெண்ணெய்ப் பொதி சனிபகவானுக்கு எரித்து வழிபட்டுக்கொண்டு வந்து அதன்பின்னர்த்தான் போசனஞ்செய்" என்று கொழும்பிலிருந்து விடுமுறை நாட்களுக்கு வீட்டிற்கு வந்த தன்மகனுக்குத் தாய் சொன்னாள். "அயமா, உதெல்லாம் 'நொன்ஸென்ஸ்' உப்படிப்பட்டவைகளைத்தான் நாங்கள் 'சுப்பஸ்ரிஷன்' மூடபத்தியென்று சொல்வது; உவைகளெல்லாம் அந்நாளையிலே பிராமணர் தங்கள் வரும்படிக்காகக் கட்டிவைத்த வீண் கட்டுப்பாடுகள்; எண்ணெயெரித்துவிட்டாற் சனிபகவான் எங்களுக்குவருந் தீமையை விலக்கிவிடுவாரா" என்று மகன் பெருஞ் சொற்பொழிவு நிகழ்த்தத் தொடங்கினான்.

* * *

தாய் நன்றுதமிழ்ப்படித்தவள்; கடவுட் பத்தியுள்ளவள்; பழைய ஆசாரங்களைக் கைக்கொண்டுள்ளவள்; அவள் மகனைப் பார்த்து "தம்பி, கொழும்பிற்குப் போனபின் நீ இவ்வளவு பழுது பட்டுவிட்டாயென்பது எனக்கு இப்பொழுதுதான் தெரிகிறது; இவைகளெல்லாம் வீண்கட்டுப்பாடுகளென்றால் உண்மையான கட்டுப்பாடுகள் எவை அதை நீதான் சொல்லு; எங்கள் சமயக் கொள்கைகள் எப்படிப்பட்டவை யென்பதை நீ கொஞ்சமும் அறியாமல், அறிய நினையாமல், புறச்சமயத்தவர் எங்கள் மார்க்கத்தைப் பற்றிச் சொல்லும் வார்த்தைகளைக் கிளிப்பிள்ளைபோற் பாடமாக்கிக்கொண்டு இப்படிச் சொல்லுகின்றாயே. 'மகனே, அப்படியல்ல; 'எப்பொருள் யார்யார்வாய்க்கேட்பினு மப்பொருள், மெய்ப்பொருள் காண்ப தறிவு.' நமக்கு விளங்காத விஷயத்தை அறிந்தவர்களிடத்தே கேட்டு நன்றாய் விளங்கிக்கொண்டபின்பே சரிபிழை ஆராய்தல் வேண்டும். கிரகங்களெல்லாம முழுமுதற் கடவுளாகிய இறைவனுடைய ஆஞ்ஞைப்படி நடப்பன. அவனையன்றி அணுவுமசையாது. சனிதோஷம் பொல்லாதது; நளமகாராசன், புருருவச் சக்கரவர்த்தி முதலாம் மன்னரெல்லாம் சனிபுருஷனாற் பீடிக்கப்பட்டுப் பெரிதும் வருந்தினார்களென எங்கள் புராணேதிகாசங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றது. மேலும் எங்கள் சமயகுரவருள் ஒருவராகிய திருஞானசம்பந்தப்பிள்ளையாரானவர் குலச்சிறைநாயனார் பாண்டிமாதேவியார் என்னும் இவர்களுடைய விண்ணப்பத்திற் கிசைந்து சமணரை வெல்லும்பொருட்டு வேதாரணியத்திலிருந்து மதுரைக்குப் புறப்பட்டபோது, வேதாரணியத்திலே பிள்ளையாரோடிருந்த அப்பர் சுவாமிகள் சம்பந்தப் பிள்ளையாரை நோக்கி 'பிள்ளையாரே, அச்சமணர்களோ மிகவுங் கொடியவர்கள், பொல்லா வஞ்சகர்கள், அவர்கள்செய்த அநியாயங்களை நான் அநுபவத்தில் அறிவேன்; மேலும், சுவாமீ, உமக்கு இப்பொழுது கிரகங்கள் சுகமாயில்லை'என்றுசொல்லியருளினர். அப்பர் வார்த்தையைக்கேட்டபிள்ளையார்உடனே

"வேயுறுதோளிபங்கன் விடமுண்டகண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறுதிங்கள்கங்கை முடிமேலணிந்தென்
உளமேபுகுந்த வதனால் [ள்ளி
ஞாயிறுதிங்கள்செவ்வாய் புதன்வியாழம்வெ
சனிபாம்பிரண்டு முடனே
ஆசறுநல்லநல்ல அவைநல்லநல்ல
அடியாரவர்க்கு மிகவே".

என்னும் திருப்பாடலை முதலாகவுள்ள கோளறுபதிகத்தைப்பாடிச் சிவபிரானை வழிபட்டுக்கொண்டு அப்பர் சுவாமியிடம் விடைபெற்று அதன்பின்னரே மதுரைக்கெழுந்தருளினரென்று பெரியபுராணத்திற் சொல்லப்பட்டிருக்கிறது".

* * *

"எங்கள் சமயகுரவர்களும் திருவருட்செல்வர்களும் நினைத்தற்கரிய பல அற்புதங்களைச்செய்தவர்களுமாகிய இம்மகான்களே கிரகங்களின் செயலைக் குறித்துப் பயப்படுவார்களானுல், சின்னாட்பல்பிணிச் சிற்றறிவினராகிய எங்களைப்போன்றவர்கள் எவ்வளவு பயப்பட்டு நடத்தல்வேண்டும். அல்லாமலும் மகனே, சனீச்சுரனைப்பற்றி எங்கள் பாட்டனார் சொன்ன ஒரு கதையையும் உனக்குச் சொல்லுகின்றேன் கேள். அரசனுக்குப் பஞ்சாங்கஞ் சொல்லும் புரோகிதப் பிராமணர் ஒருவர் இருந்தார். அவர் சோதிடத்தில் மிகவும் வல்லவர்; அவரை ஏழரை பிடித்துப் பெரிதும் வருத்திவந்தது; தம்மை ஏழரை விட்டு நீங்குதற்காகிய தினம் எப்பொழுதென்பதை அந்த ஐயர் நிச்சயித்து வைத்துக்கொண்டார். அத்தினத்தில் யாதும் போபத்து நேருமென்பது அவருக்குந் தெரியும். ஆதலால் யாதும் இடையூறு வாராதபடி தம்மைப் பாதுகாத்துக்கொள்ளுதல் வேண்டுமென்று நினைத்து ஐயர் அதிகாலையிற் புறப்பட்டுச் சமீபத்திலேயுள்ள ஒரு மலைக் குகையிற் போய் ஒளித்திருந்துகொண்டார். ஐயர் செயலை யறிந்த சனீசுவரன் புன்னகை செய்தான். உடனே புரோகிதர்போல் வேடம்பூண்டு அரசனுடைய மாளிகையிலுள்ள அந்தப்புரத்திற்குச் சென்றான். பெண்களாயுள்ளார் புரோகிதர்கட்கு மறையும் வழக்கம் எக்காலத்துமில்லை. அரசன்றேவி புரோகிதர் வேடங்கொண்ட சனீசுவரனை உண்மையாகத் தங்கள் புரோகிதர் என்றே மதித்து ஆசனமுதவி உபசரித்தாள். புரோகிதர் அத்தினத்தில் அரசி ஆச்சரியப்படத்தக்கதாக, முன்னொருபோதும் பேசாத தகாத வார்த்தைகள் பேசினார்; அரசன்றேவியைச் சமீபித்து அவளுடைய முந்தானையைப் பிடித்து இழுத்தார். மகாராணி ஓலமிடுதலும் ஐயர் ஒடி மறைந்தார்".

* * *

"உடனே விஷயம் மகாராசாவிற்குத் தெரிவிக்கப்பட்டது; அரசன் அடங்காச் சீற்றங்கொண்டு தன் ஏவலரை விளித்துப் புரோகிதப் பிராமணனைக் குடுமியிற் பிடித்து இழுத்துவரும்படி ஆஞ்ஞாபித்தான். ஏவலர் காற்றென விரைந்து சென்று புரோகிதரை எங்குந் தேடியுங் கண்டிலர். அவர்களுள் இருவர் தேடிக்கொண்டு மீண்டு வரும் மார்க்கத்தில் மழை தூற அம்மழைக்கு ஒதுக்கிடந் தேடி அந்த இரு ஏவலரும் பக்கத்தேயுள்ள மலைக் குகையிற் போனார்கள். ஐயர் அங்கே மறைந்து இருக்கக் கண்டார்கள். புரோகிதர் அரசனுக்குப் பெருருங் குற்றத்தைச் செய்துவிட்டு இங்கே வந்து ஒளித்திருக்கின்றார் என்று அந்த ஏவலர் நினைத்துப் பார்ப்பானைப் பிடரிற் பிடித்துத் தள்ளிக்கொண்டு அரசமாளிகைக்குச் சென்றார்கள். புரோகிதருக்குக் காரணம் யாதும் புலப்படவில்லை. அவர்களை யாதும் கேட்டால் அவர்கள் கையினாலேதான் உத்தரஞ் சொல்வார்கள் போலிருந்தது ஐயரை அரசன் முன்னர்க் கொண்டுபோய் விடுதலும் அவன் அவருடன் வார்த்தையாடாமலும் அவரைக் கண்ணுற் பாராமலும் மிக்க சினத்தோடு தன் அமைச்சர் பிரதானிகள் முதலானோரை யழைத்துச் சபை கூட்டினான், எல்லாருஞ் சமுகமா யிருக்கும்போது புரோகிதர் செய்த குற்றத்தை அரசன் சபையிலே சொன்னான். சபையோர் மறையவரைக் கோபத்தோடும் வெறுப்போடும் பார்த்தார்கள். வேதியருக்குச்

## தீபாவலி.

இவ்வருடத்திலே தீபாவலி கைக்கொள்ளப்படவேண்டிய தினத்தையிட்டுப் பஞ்சாங்க கணிதர்கட்கிடையே அபிப்பிராய பேதம் ஏற்படலாயிற்று. ஆனால் யாழ்ப்பாணத்தவர்களும் இலங்கையின் மற்றும் பாகங்களில் வசிப்பவர்களும் கைக்கொண்டு வரும் இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் சுப்பிரமணியசாஸ்திரிகள் வாக்கிய பஞ்சாங்கம் திருக்கணித பஞ்சாங்கம் என்னும் மூன்று பஞ்சாங்கங்களிலும் அபிப்பிராயபேதமின்றி, தீபாவலி புரட்டாதி மாசத்திலேயே கொள்ளப்படல்வேண்டுமெனக் கூறப்பட்டிருக்கின்றது. சென்ற அறுபது வருடங்கட்கிடையில் சர்வசித்து விபவ என்னும் இரு வருடங்களிலே தீபாவலி புரட்டாதிமாதத்திலேயே கொள்ளப்பட்டதெனக் காலங்கண்ட முதியோர் கூறுகின்றனர். அதன் உண்மையைக் குறித்த வருடங்களின் (பழைய) பஞ்சாங்கங்களிலும் காணலாம்.

இனி, எக்காலத்திலாயினும் தீபாவலி பிந்தியும் கந்தசஷ்டி முந்தியும் வந்ததில்லையென்றும் பெரியோர் கூறுகின்றனர். இவற்றையெல்லாம் நோக்கும்போது இங்குள்ளார் அனுசரிக்கும் மூன்று பஞ்சாங்கங்களும் கூறுகிறபடி புரட்டாதிமாசத்திற் கொள்வதே முறைமையென நினைக்கின்றேம்.

## திருநீலகண்ட நாயனார்.

(முற்றொடர்)

திருநீலகண்டம் என்னும் திருநாமம் இந்தமெய்யடியாருக்கு மகாமந்திரமாயது. அவரைக் காணும் எவரும் திருநீலகண்டம் என்னும் மந்திரத்தை அவரது வாயினின்றும் கேளாதிரார். இதனால் இப்பெருந்தகையாரை எல்லோரும திருநீலகண்டர் என அழைக்கத் தலைப்பட்டனர். உலகெங்கும் பூரண வெளிச்சத்தையும் குளிர்ச்சியையுங்கொடுக்கும் சந்திரனிடத்தே சிறு மறுவான திருப்பதுபோலச் சற்கருமங்களில் ஈடுபட்டுழைக்கும் இம்மெய்யடியாரிடத்தும் ஓர் விலைமாதிடம் செல்லும் முறைமை இருந்தது. ஒரு தினம் இந்த அடியவர் அங்கிருந்து தமது வீட்டுக்குத் திரும்பும்போது இவர் செய்கை அறிந்த அவரது மனைவியாருக்கு அதிக மனஸ்தாபமுண்டாயது. ஆயினும் மனைவியார் தமதுமனஸ்தாபத்தை நாயனாருக்குக் காட்டாது காத்துவைவாராயினர். நாயனார், மனைவியார் கொண்டிருக்கும் மனஸ்தாபத்தை ஒருவாறுமாற்றிவிடலாமெனக் கருதி அவர் மருங்கிற் சென்றார். செல்லுதலும், இல்லத்தலைவி, "எம்மைத் தீண்டுவீராயின் திருநீலகண்டம்" என்றனர். இதனைக் கேட்ட நாயனார் மிக அச்சங்கொண்டார்; திகைத்தார்; செய்வதென்னென அறியாது தியங்கினர்; சற்றில் விஷயம் முழுவதையும் உணர்ந்துகொண்டார். பின்பு நாயனார் சிறிது அப்பாற் சென்று "பெண்ணே, நீ 'எம்மை' என்று பன்மையிற் கூறினமையினால் நின்னைமாத்திரமன்று, பெண்களாயுள்ளார் எவரையும் இனி நான் மனதிலும் கருதேன்; இது சத்தியம்" என்றார். சத்தியநெறி நிற்கும் இம்மெய்யடியாரது உறுதிவாக்கியத்தைக் கேட்ட மனைவியாரும் திகைத்து அயர்ந்தார்.

நாயனார் அந்த இல்லத்திற்றானே தமது இல்லத்தலைவியுடன் தொடர்பின்றிய இல்லாச்சிரமத்தை நடத்துவாராயினர் இருவரும் ஒரே மனசுடையவர்களாய் அன்பிற் சிறிதும் குறைவின்றி இல்லறதருமத்துக்குரிய ஏனைய கருமங்களையெல்லாம் இனிது ஆற்றிவந்தார்கள். இதனாலே, இவ்விரகசியத்தைப் பிறரெவருமறிந்திலர். (திருநீலகண்ட நாயனார், முன்பு உலகிற் சிறிது மூழ்கினரெனினும், சிவபத்தி அவரிடத்தே அதிகமாக இருந்தமையினாலும், மனைவியாரது மனஸ்தாபங் காரணமாகத் தாம் செய்துகொண்ட உறுதியைக் கடைப்பிடித்தொழுகியமையினாலும் பின் நிறைந்த சிவாநுபூதிச் செல்வராயினர்.)

இளம்பிராயத்தை யுடையவர்களாகிய திருநீலகண்டநாயரும் கற்பிற்சிறந்த அவரது மனைவியாரும் இடையீடின்றிச் சிவத்தியானஞ் செய்தலும் தமது இல்லத்துக் கெழுந்தருளும் சிவனடியார்களுக்குத் திருவோடு கொடுத்தலுமாகிய இவற்றில் தலைசிறந்துவிளங்கினர். (மட்பாண்டங்களை ஆக்கும் குயவர் குலத்தில் உதித்தமையினால் தமது குலத்தொழிலாற் சம்பாதிக்கப்படும் திருவோட்டை அடியார்களுக்கு உதவுதலாகிய திருத்தொண்டை இந்நாயனார் மேற்கொண்டார். எனவே எக்குலத்தவராயினும் அக்குல ஆசாரமுறை பிறழாது சற்கருமம் புரிந்து ஈடேறலாம் என்பது தெளிவு. பறையர்குலத்துதித்த திருநாளைப்போவார்நாயனார் தம் குலத்தொழிலாற் பெறப்படும் வார் தோல் கோரோசனை முதலானவற்றைக் கொடுத்தும், ஏகாலியர் குலத்துதித்த திருக்குறிப்புத்தொண்ட நாயனார் தம் குலாசாரப்படி சிவனடியார்களுக்கு ஆடைபொலித்துக் கொடுத்தும் கடைத்தேறியமையும் பிறவும் இதற்குச் சான்றும்.)

இங்ஙனம் திருநீலகண்டநாயனார் இல்லறவாசிகள் எவர்களும் எக்காலத்தும் அனுசரியாத நூதன இல்வாழ்க்கையை நடாத்திவருதலும் ஆண்டுகள் பல சென்றன. வாலிப கோலம் முழுவதும் மாறி நரை திரை முதலியன உண்டாயின. அவரது உடம்பின் நிலை மாறியது. கண்கள் ஒளி மழுங்கின. ஆயினும் அவரிடத்தே குடிகொண்டுள்ள சிவத்தியானமும் சிவனடியார்களுக்குத் திருவோடு கொடுத்தலாகிய சற்கருமமும் அவருக்குப் பூரணவிளைவைக் கொடுத்துவந்தன. இதனால் அவர் பெரும் பயனைப் பெறுதற்குரியரானார். (வரும்)

---

**பத்திரிகாபிமானிகள் தங்களால் வரவேண்டிய பத்திரக் கிரயத்தைத் தயைசெய்து காலதாமசமின்றி அனுப்பிவைப்பார்களாக.**

---

### கால நிலை.

யாழ்ப்பாணப் பகுதியிலே சென்ற சில தினங்களாக நன்மழை பெய்தது. சில கமக்காரர் இந்த மழையைக் கண்டபின்பே விதைக்கின்றனர். சில இடங்களில் பயிர் எரிந்தும் முக்கி விதைத்தது முளையாமலிருக்கவும் காணப்படுகின்றது. மழை பெய்தபின் உஷ்ணம் குறைவில்லை.

### லாகூரில் தீவிபத்து.

சென்ற வியாழக்கிழமை லாகூரிலே ஒரு பெருந்தீவிபத்துண்டாயது. அறுபது கூரைவீடுகள் எரிந்து சாம்பராயின. சீவமோசமில்லை.

### வட்டுக்கோட்டைச் சைவாங்கில வித்தியாசாலை.

கௌரவ ஸ்ரீ. வை. துரைசுவாமி அவர்கள் வட்டுக்கோட்டைச் சைவாங்கிலவித்தியாசாலை மானேஜராக நியமனம் பெற்றிருக்கின்றனர்.

### நீரினுள்ஓடும்கப்பல்சேதமுற்றமை.

சென்ற ஞாயிற்றுக்கிழமை பொதினியாக் குடாக்கடலில் நீரினுள் ஓடும் கப்பல் ஒன்று மூழ்கியது. அதிற் பிரயாணஞ் செய்தவர்களாகிய அறுபத்துநான்கு பேரும் மாண்டனர்.

### மாத்தளைக் கால நிலை.

இக்காட்களில் மழை வருஷிக்கின்றது. தண்ணீர்ப் பஞ்சத்தினால் தினந்தோறும் அரைநேரம்பூட்டப்பட்டிருந்த தண்ணீர்க் குழாய்கள் இப்போது மழையின் நன்மையினால் நாள்முழுவதும் திறக்கப்பட்டிருக்கின்றன.

### இருசகோதரர் நீரில் மூழ்கி இறந்தமை.

சென்ற சனிக்கிழமை கொழும்பிலே பத்துவயதும் பதினொரு வயதுமுள்ள இருசகோதரர் அங்கு அதிக மழை பெய்தமையினால் வெள்ளம் பார்க்கப் புறப்பட்டார்கள். இருவரும் அதிக நேரம் நீரில் நடந்து சுற்றிப்பார்த்து சற்றில் ஆழமான இடத்தில் இறங்கி மூழ்கி இறந்தனர். அவர்களின் பிரேதம் மறுநாள் வெளியாயது.

### பெல்ஜியதேச அரசரும் அரசியும்.

இந்த அக்டோபர்மீ 21உ புதன்கிழமை பெல்ஜியதேச அரசரும் அரசியும் இலங்கைக்கு வருவார்களென்றும், அவர்களைச் சன்மானப்படுத்தும் பொருட்டுக் கண்டியில் ஓர் பெரகாரக்கொண்டாட்டம் நடத்தப்படுமென்றும் சொல்லப்படுகிறது. எமது பிரதி தேசாதிபதியாகிய மிஸ்ரர் சிசில் கிளெமென்றியவர்கள் இந்த அக்டோபர்மீ 17உ இலங்கையை விட்டுப் புறப்படுவதனால் அவருக்குப் பதிலாகக் கடமைபார்க்கும்படி நியமனம்பெற்றிருக்கும் கௌரவ மிஸ்ரர் ஈ. பி. அலெக்ஷாண்டர் அவர்கள் பெல்ஜிய அரசரையும் அரசியையும் உபசரிப்பர்,

### மாகாண "இஞ்சினிய"ருடைய மேற்பார்வையிற் கட்டப்பட்ட பள்ளிக்கூடம் விழ்ந்தமை

சென்ற வாரம் சிலாபத்திலே சென் ஜூட்ஸ் பாடசாலையின் ஓர்பாகம் காத்திரா வண்ணம் இடிந்து விழ்ந்தது. பள்ளிக்கூடப் பிள்ளைகள் அங்கில்லாத சமயத்தில் இவ்விபத்து நேர்ந்தமையினால் சீவமோசமில்லை இக்கட்டிடம் மாகாண "இஞ்சினிய"ருடைய மேற்பார்வையிற் கட்டப்பட்டதாம். சில நாட்களாக அதிக மழைபெய்தமையினால் இவ்விபத்து நேர்ந்ததென டெ. மாகாண "இஞ்சினியர்" அபிப்பிராயப்படுகின்றனர். அதிக மழையினாற் பாதிக்கப்பட்ட ஏனைய கட்டிடங்கள் சேதமுறவில்லை.

### மன்னார்த் துறைமுகப் பகுதியாரை அணுப்பிய இந்திய வியாபாரிகள்.

சில நாட்களுக்கு முன் சென்னையிலிருந்து வியாபாரத்தின் பொருட்டுப் பட்டுச்சேலைகளை இலங்கைக்குக் கொண்டுவந்த இந்திய வியாபாரிகள் இருவர் தாம் கொண்டுவந்த பொருள்களின் விலையை அதிகமாகக் குறைத்துக் கூறியமையினால் மன்னார்த் துறைமுகப்பகுதியார் அவற்றை அரசினர் பொருளாக அபகரித்தனர். அச்சேலைகள் இங்குள்ள ஒரு புடவை வியாபாரிக்கு 2,650 ரூபாவாக விற்கப்பட்டன. வேறும் ஒரு இந்திய வியாபாரியின் பட்டுச்சேலைகள் மேற்சொல்லப்பட்ட குற்றச்சாட்டினால் அபகரிக்கப்பட்டு மன்னார்க் கச்சேரியிற் கிடக்கின்றன. அவை இந்த அக்டோபர்மீ 19உ பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஒரு மரக்கலம் ஆழிவாய்ப்பட்டமை.

பதினொருபேர் ஒன்பது நாள் கடலிற் கஷ்டமுற்றனர். மூவர் ஆழிவாய்ப்பட்டனர்.

இற்றைக்கு மூன்று வாரங்களுக்குமுன் மாலைதீவாருடைய இருபாய் மரக்கலம் ஒன்று பல பொருட்களுடன் கொழும்பிலிருந்து மாலைதீவுக்குப் புறப்பட்டது. அது கொழும்பைவிட்டுப் புறப்பட்ட மறுதினம் உக்கிரமான புயலினால் அதிக இடர்ப்பட்டது. கொழும்பிலிருந்து புறப்பட்ட மூன்றாம்நாள் நெடுந்தீவுக்குச்சமீபமான கடலில் அம்மரக்கலம் ஆழிவாய்ப்பட்டது தோணியிற் சென்ற பதினான்கு பேருள் பதினொருபேர் ஆழிவாய்ப்பட்ட தோணியிலிருந்து மிதந்த ஒரு மரத்தைப் பிடித்துக்கொண்டு ஒன்பது நாட்களாகக் கடலிற் பேரிடர்ப்பட்டனர். அதிஷ்டவசமாக அந்தத் தோணியிலிருந்த சில உணவுப் பொருள்களும் கொஞ்சந் தண்ணீரும் அவர்களுக்கு அகப்பட்டன. மிதந்த மரத்தில் இந்தப் பதினொருபேரும் தமக்குத் தெய்வஉதவியினாற் கிடைத்த அற்ப உணவுடன் ஆறுநாட் காலங்கழித்தனர். அதன்பின்னுள்ள மூன்று நாட்களும் உணவின்றிக் கடல்நீரை உண்டு கஷ்டப்பட்டுப் பிரக்ஞையற்றும்போகும் நிலையை அடைந்தார்கள். அவ்வழியாற் சென்ற "றோயல் இந்தியன் மறீன் சேவிஸ்" கப்பலொன்று நிக்கபார்ஸ் தீவுக் கரையில் இவர்கள்பேரிடர்ப்படுவதைக்கண்டு அவர்களை மீட்டுச் சென்று இறங்கூனி ஏறக்கியது. றங்கூனிலிருந்து புறப்பட்ட 'ஜலற்றுங்' என்னும் புகைக்கப்பல் அந்தப் பதினொருபேரையும் சென்றசனிக்கிழமை கொழும்புத் துறைமுகத்திற் கொண்டுவந்திறக்கியது. அவர்கள் எஞ்சிய மூவரையும்பற்றித் தமக்கொன்றுந்தெரியாதெனக் கூறினர். அவர்கள் ஆழிவாய்ப்பட்டனரென்று சொல்லப்படுகிறது.

### தேகவியோகம்.

சென்ற வியாழக்கிழமை தெல்லிப்பழை ஸ்ரீ பி. அப்பாக்குட்டியவர்கள் தமது எழுபத்தைந்தாவது வயதிற் தேகவியோகமாயினரென்றும் துக்கசமாசாரத்தை அறியலானோம். யாழ்ப்பாணம் ஆசிரியர் கல்லூரித் தலைவராகிய ஸ்ரீ அ. பொன்னையா அவர்களும் பிறக்ரர் ஸ்ரீ அ. அப்பாத்துரை அவர்களும் இவரது புத்திரராவர்.

### மாத்தளை சர்வசனசகோதர ஒற்றுமைச்சங்கம்.

இப்பெயர் கொண்ட ஓர் சங்கமானது இம் மாத்தளை நகரில் இற்றைக்குச் சிலமாசங்கட்கு முன்னர் ஆரம்பமாகி ஒவ்வொரு பானு புதவாரங்களிலும் கூட்டங்கூடிபெற்றுவருகின்றது. ஒற்றுமை, கைத்தொழில் வியாபாரம் கல்வி தேசநன்மையின் அபிவிருத்தி கதர் உடை அபிவிருத்திமுதலியபிறவு இதன் நன்நோக்கங்களாம். கதர் ஸ்தானம் ஏற்படுத்தலும், இராப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தலும் இப்போது அமைக்கப்பெறும் விஷயங்களாம். இதன் தற்கால அக்கிராசனர். மிஸ்ரர் கா. மாதர்சாகிபு அவர்கள். உபஅக்கிராசனர் திரு. வே. கு. பாலகுருசாமி ஆசாரியவர்கள் காரியதரிசி. மிஸ்ரர். க இ. முகம்மது ஹஸன் அவர்கள் தனாதிகாரி. மிஸ்ரர் மீ அ. அசனலியார் அவர்கள். இத்தகைய மாத்தளை சர்வசகோதர ஒற்றுமைச்சங்கமண்டபத்தில் மாத்தளையில் மதுபானத்தவறலைகள் ஒருங்கே நீக்கப்பட்ட கொண்டாட்டத்தின் பொருட்டுச் சென்ற செப்டெம்பர்மீ 30உ மாலை 4மணியளவில் ஓர் மகாநாடு கூட்டினர். அத்தருணம், நியாயதுரந்தரர் மிஸ்ரர். விமலசூரி அவர்களும் நியாயதுரந்தரர் திரு செல்லத்தம்பி அவர்களும் நியாயதுரந்தரர் திருவாளர் இராசரத்தினமவர்களும் வர்த்தகர் மிஸ்ரர் கோனிஸ்டிசில்வா அவர்களும், டை சங்க அங்கத்தவர்களுமாகப் பலர் குழுமியிருந்தனர். மிஸ்ரர் கா. மதார் சாகிபு அவர்கள் பிரேரணையின்படி சர்வசன சம்மதத்துடன் யாழ்ப்பாணம் திருநெல்வேலியிலிருந்து கொத்தாரிஸ் உத்தியோகமாய் வந்திருக்கும் திருவாளர் தி சிவசிதம்பரம் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். அவர்கள் அச்சபையோரெல்லாரும் ஆனந்திக்குமாறு ஆங்கு குழுமிய சிங்களர், தமிழர், சோனகர் முதலிய முத்திறத்தாரின் ஒற்றுமையையும், இசிலாமதம், கிறிஸ்துமதம், புத்தமதம் இந்துமதம் என்னுமிவற்றிலுள்ள எல்லோரும் தேசநன்மையைக் கடைப்பிடித்து நிற்கும் பெருமையையுங் குறித்து மிகவிபர்ந்த ஓர் நீடித்த சொற்பொழிவு நிகழ்த்தி அக்கிராசனத் தமர்ந்தனர் அதன்பின் திருவாளர் சி. திருஞானசம்பந்தன் அவர்கள் மதுபானத்தால் விளையுங்கேட்டைப்பற்றியும், அது மாத்தளை நகரில் அறவே நீக்கப்பட்டுப்போனமையினால் குடித்து வெறித்து மானம் இழந்து இழிதொழில் புரிந்தோரெல்லாம் இனிமேல் நன்னெறி ஒழுகியுய்யவடைவார்கள் என்பதைப்பற்றியும் ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினர். பின்னர் திருவளர். கு வே பாலகுருசாமி ஆசாரியவர்கள் சிறுமையால் வரும்வறுமையையகற்றல் என்னும் விஷயத்தைக்குறித்தும் மிஸ்ரர் க. மு முகம்மதுசன் அவர்கள் திடசித்தம் என்னும் விஷத்தைக்குறித்தும் மிஸ்றர். கா. மாதர்சாகிபு அவர்கள் மாத்தளை நகரபரிபாசங்கத்துக்கு அங்கத்தவராய் முன்வந்து நிற்பார்க்கு சம்மதம் கொடுக்கும் விஷயத்தையிட்டும் திருவாளர் செல்லத்தம்பி அவர்கள் டை சங்கத்தின் நோக்கத்தைக்குறித்தும் சம்மதம் கொடுப்பவர்கள் தத்தம் மனதில் இருத்திக் கொள்ளவேண்டிய முக்கிய கருமங்களைக்குறித்தும் மகாத்துமாகாந்தியடிகளின் தொண்டரான மிஸ்ரர் அல்லாப்பிச்சை அவர்கள் மதுபானத்தின் கெடுதியைக்குறித்தும் சொற்பொழிவு நிகழ்த்தினர். முடிவில் சபையிலுள்ளவர்கள் எல்லாருக்கும் சந்தனம் அளிக்கப்பெற்றும் பனிநீர் விசிறப்பெற்றும் சந்தோஷங்கொண்டாடி அக்கிராசனர் அவர்கள் அச்சபையில் அமைதியுடன் கேட்டிருந்த அவைக்களத்தார்க்கு ஆரமைபான அதிகூறச் சபைபூர்த்தியானது.

கதடி.

### அன்புடைமை.

(வண்ணார்பண்ணை ஸ்ரீமதி. க. நவரத்தின அம்மாள் எழுதியது)

அன்பார்ந்தசகோதரிகாள்,

மானுடயாக்கையைப்பெற்ற நமக்கு அன்பே பிரதானம். தாய் தந்தை முதலிய சுற்றத்தாரிடம் நாம் கொள்ளும் மனநெகிழ்ச்சியே அன்பெனப்படும். நம்மிடம் அன்பிருக்குமாகில் பொய், களவு, சூது, வாது முதலிய தீக்குணங்கள் நீங்கி வாய்மை, பொறுமை, கடவுட்பக்தி, சீவகாருண்யம் முதலிய நற்குணங்களுண்டாகும். இவ்வன்பு பல்வேறு பெயர்களுடன் விளங்கும. கடவுளிடத்தில் வைக்கும் அன்பைப் பக்தியெனவும், குருவிடத்தில் வைக்கும் அன்பை விசுவாசமெனவும், சிநேகிதரிடத்தில் வைக்கும் அன்பை நட்பு எனவும், வறியவர்களிடத்தில் வைக்கும் அன்பை இரக்கம் எனவும், பிராணிகளிடத்தில்வைக்கும் அன்பை அருள் எனவும், வேலைபாட்களின்மேல் வைக்கும் அன்பைப் பட்சமெனவும், தேசம் சாதி பாஷை சமயம் என்னுமிவைகளின்மீது வைக்கும் அன்பை அபிமானமெனவும் கூறுவர்.

ஒருவனிடம் அன்பென்னும் குணம் எப்பொழுது உண்டாகுமோ, அப்பொழுதே அவன் சுகமுறுவான். அன்புடையோரை உலகம் புகழும். அன்பைக்கொண்டே எவ்வித பெரும் பேறுகளையும் பெறலாம். இவ்வுலகில் நாமடையும்பேறுகளில அன்பாலடையும்பேறு ஒன்றும். முதலில் அன்பு சுகத்தைத்தராவிடினும் ஈற்றில் அதனாலடையும் பலன் அதிகம். இத்தகைய அன்பை நாம் இழப்போமாகில வேறு எத்தகைய செய்கைகளைச் செய்தபோதும் ஈறறில் நன்மையடையமாட்டோம். வண்டி எவ்விதம் அச்சாணியின்றி ஓடாதோ அவ்விதமே, அன்பில்லாவிட்டால் நாம் யாதொன்றும் செய்ய இயலாது. இவ்வுலகவாழ்க்கைக்கு அன்பே அவசியம் வேண்டும். இவ்வன்பிலிருந்தே கடவுள்மேற் பக்தியுண்டாகும்.

'அன்புஞ்சிவமுமிரண்டென்பா ரறிவிலார்
அன்பேசிவமாவதாருமறிகிலார்
அன்பேசிவமாவதாருமறிந்தபின்
அன்பேசிவமாயமர்ந்திருப்பாரே' என்பதால்

எல்லாம்வல்ல பரம்பொருளை அன்பாலேயே யடையலாமென்பது நன்குவிளங்கும். இவ்வுலகின்கண்ணுள்ள தருமங்கள் அன்பினிடத்திருந்தேயுதித்தன. நாம் யாவரிடமும் அன்புகொண்டு நடப்போமாகில் கடவுள் நம்மேல் அருள் கொள்வார்.

ஒருவரை நாம் காணமுடியாவிடினும் அவரது குணுதிசயங்களை மற்றவர்களால் கேள்வியுற்று அன்னவர்மேல் நாம் கொள்ளும் அன்பே உள்ளலெனப்படும். எப்படிப்பட்டவர்களுக்கும் அன்பம் நேரிட்டகாலத்தில் நமக்கு உயிர்ச் சேதம்தான் வருமாயினும் அவர்களது துன்பத்

லதைப் போக்குவதே அன்பின் இயல்பாம். அதனை விடுத்து ஒருவரைக் கண்டமாத்திரம் நம்மை விட அவர்மேல் அன்புடையோர் வேறொருவரில்லையெனக் காண்பிப்பதுவும் அவரில்லாத இடத்தில் அவர்மேல் வெறுப்புக்கொள்வதும், அவரால் தனக்கொருகாரியம் ஆகவேண்டுமாயின் அக்காரியம் முடியும்வரையில அன்புடையோர்போல் நடிப்பதும், அக்காரியம் முடிந்தவுடன் நீயார்? என்பதும் ஆகாவாம். நமக்கு ஒருவரிடம் உண்மையான அன்பு உண்டாகுமாகில் அவருக்கு ஏற்படும் இன்பதுன்பமிரண்டும் நம்முடையதேயாகும். அவருக்காக நாம் எத்தகைய இன்னல்களையடைந்தபோதும், அது இடையூறாகாது இன்பமாகவேமுடியும். அவர்கள் நமக்குக் கெடுதல் செய்தபோதும் நாம் அன்பின் மிகுதியால் அவைநமக்குக் கெடுதியாகமாட்டா. அன்புடையோர்பிறர்க்குண்டாகிய துன்பத்தைக்கண்டு சகியார்.

'பகைசேருமெண்ணுன்குபற்கொண்டேன்று வகைசேர்சுவையருந்துமாப்போற்—றொகைச்சேர் பகைவரிடமெய்யன்புபாவித்தவராற் சுகமுறுதனல்லோர்தொழில்'

ஆதலால் எவ்விதப் பகைவரிடமும் நாம் அன்புள்ளவர்களாக நடப்போமாகில் அப்பகைவரும் நமக்குற்ற நண்பராவரென்பதற்கையமில்லை.

'அன்பிலாரெல்லாந்தமக்குரியரன்புடையா ரென்புமுரியர்பிறர்க்கு'

அன்பு இல்லாதவர் யாவும் தமக்கேயுரியவையென்பர், அன்புடையோர் தமது எலும்பு பிறர்க்குடையது என்பர். இவ்வித அன்பினாலேயே கடவுளது அருள் ஏற்படும். எண்ணரிய பிறவிகளுள் மிகவும் மேம்பட்ட இம்மானுடப் பிறவி நம்மிடம் இருக்கும் பொழுதே நித்திய ஆனந்தப் பரமபொருளின முத்தியின்பத்தைப் பெறுதற்குரிய வழிகளைத்தேடல் வேண்டும். அதற்கு அன்பே முதல்வழிகாட்டியாகும். ஆதலாற் சகோதரிகளே, நாம் யாவரிடமும் அன்புபாராட்டியொழுகுதல்வேண்டும்.

---

## உழவுத் தொழில்.

### அஹிம்சா தர்மத்துக்கு மாறுபட்டதா?

மகாத்மாகாந்தியின் பதில்.

"நவஜீவன்" பத்திரிகையின் வாசகர்களில் ஒருவர் மகாத்மாகாந்தியைப் பின்வருமாறு கேட்டிருந்தார்:—

"விவசாயம் தூய்மைபொருந்திய ஒரு யக்ஞமென்றும், அதுவே உண்மைத்தொண்டு என்றும் "நவஜீவ"னில் எழுதியிருக்கின்றீர்கள். தவறுதலாய் ஓர் எறும்பினமீது கால் வைத்துவிட்டால் நமக்குப் பெருந் துன்பம் உண்டாகிறது. ஆனால் உழவுத்தொழில் செய்யும்போதோ ஆயிரக்கணக்கான சிறு ஜெந்துக்கள் நாசமாகின்றன. இயற்கையில் இவ்வளவு ஹிம்சைக்கு இடந்தரும் தொழிலில் ஒருவர் எவ்வாறு ஈடுபடுவது? இதைவிடப் பிச்சை எடுத்தாவது பிழைத்தல் நல்லதில்லையா? எனக்கு விவசாயத்தில் அதிக பிரியமுண்டு. ஆனால் மேற்கண்ட விஷயத்தை யோசிக்கும்போதும், உழவுமாடுகளை ஓட்டுவதற்கு உபயோகிக்கப்படும் தார்க்கழிகளைப் பார்க்கும்போதும் எனக்குப் பயமுண்டாகிறது."

இதன்பேரில் மகாத்மா அளித்துள்ள பதிலின் சாராம்சம் பின்வருமாறு:—

உழுது பயிர்செய்யும்போது கணக்கற்ற சிறு பிராணிகள் அழிந்துபோவது உண்மையே. நாம் மூச்சுவிடுகையிலும் இவ்வாறே கணக்கற்ற ஜீவராசிகள் நாசமாகின்றன. இதற்காக நாம் தற்கொலைசெய்துகொண்டு உடம்பை அழித்துவிடுகிறோமில்லை. இவ்வாறே விவசாயம் நாம் செய்யாமலிருந்துவிட்டால்மட்டும் அதை அழித்துவிட முடியாது. மனிதன் மண்ணிலிருந்து பிறந்தான். அவன் உடல் மண்ணாலாக்கப்பட்டது. மண்ணின் சாரத்தைக் கொண்டு உடலை வளர்த்துவருகிறான். விவசாயத்திலுள்ள ஹிம்சையிலிருந்து நிவிர்த்தி பெறுவதற்காக ஒருவன் பிச்சையெடுத்துப் பிழைத்தால் அவன் இரண்டு குற்றங்கள் செய்தவன் ஆவான். அவன் பிச்சையெடுத்துப் பெறும் உணவு யாரேனும் உழுதொழில் செய்ததன் பயனாகவே வந்தது. ஆகவே, விவசாயத்திலுள்ள ஹிம்சைக்கு அவன் உடந்தைப்பட்டேயிருக்கிறான். அத்துடன் சோம்பரை வளர்த்த குற்றமும் அவனைச் சாரும்.

நமது உடலைக் காப்பாற்றுவதில் உள்ள ஹிம்சையை எவ்வாறு நாம் விலக்க முடியாதோ அவ்வாறே, விவசாயம் முதலிய இன்றியமையாத் தொழில்களில் உள்ள ஹிம்சையையும் நாம் விலக்க முடியாது. இதனால் அது ஹிம்சையில்லாமல் போய்விடவில்லை ஹிம்சை ஹிம்சைதான். ஆயினும் இதில் குற்றம் குறைவு. ஞானம் பக்தி முதலிய சாதனங்களைக்கொண்டு மனிதன் இச்சப்பாவத்திலிருந்து விடுபட்டு மோட்சமடைதல் கூடும். மனிதனுக்கு அவன் உடலே விடுதலைக்கும், பந்தத்திற்கும் சாதனமாயிருக்கிறது. விவசாயமும் இவ்வாறே. லட்சாதிபதியாய் ஆகவேண்டுமென்ற நோக்கத்துடன் விவசாயத்தில் ஈடுபடுவோனுக்கு விவசாயமே பந்தமாகிவிடுகிறது. மற்று, ஜீவனோபாயத்திற்காகமட்டும் உழவுத்தொழிலைக் கைக்கொண்டோனுக்கு அதுவே மோட்சசாதனமாகிறது. உலகில் எல்லாவகைக் கருமத்திலும் ஓரளவு ஹிம்சையுண்டு. முத்துக்குளித்தல், பட்டுத்தொழில், தங்கம் எடுத்தல் முதலிய தொழில்கள் மனிதன் உயிர்வாழ்வுக்கு இன்றியமையாதனவல்ல. ஆகையால் விவசாயத்தை விட இவை அதிக குற்றம் பொருந்தியவை. எப்பக்கம் திரும்பினும் ஹிம்சை நிறைந்த இவ்வுலகில், அஹிம்சா தர்மத்தை முதன்முதல் எடுத்தோதிய மகானுக்கு வணக்குதல செய்வோம்.

ஓர் எறும்புக்கும் தீங்குசெய்யாமல் இருப்பது முதன்மையான கடமையேயாகும் ஹி...

நக்கமின்றிப் பெருகித்துடனே ஜீவராசிகளை பிடித்துச்செல்லவன் வேண்டுமென்றே பாவஞ் செய்கவருகிறான். உழவுத் தொழிலில் வேறு வழியில்லாது ஹிம்சை செய்பவனே இவனுடனொப்பிட முடியாது. ஆற்றுர்கணக்கான விவசாயிகள் தங்கள் எதிர்ப்பட்ட ஜெந்துக்களைக் காப்பாற்றுகிறார்கள். அவர்களிடம் கர்வமில்லை உலகத்தில் 100-க்கு 90 பேர் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தப் பூமிக்கே விவசாயம் ஜீவாதாரமானது. ஆதலினால் அது ஆயதானதும் அவசியமானதுமான டக்ஞமாகும். ஆதலினால் தர்மபுத்தியுள்ளவர்கள் மற்ற அநாவசியமான தொழில்களைக் கைவிட்டு இதை மேற்கொள்ளலாம்.

தார்க்கழியைப்பற்றிய ஆட்சேபம் எல்லா விவசாயிகளுக்கும் பொருந்தாது. விவசாயத்திற்குத் தார்க்கழி இன்றியமையாததல்ல. அநேகர் கால்நடைகளைத் தங்களுடைய சொந்தக் குழந்தைகளைப்போல் பாவித்து அருமையுடனே வளர்த்துவருகிறார்கள். "நவசக்தி".

---

## மொறுகோ இராச்சியம்.

(முற்றொடர்).

என்ன செய்வது? மீண்டும் மந்திரிசபை கூடிக்கலைந்தது சபிஷன்கள், கமிட்டிகள், ஸப் கமிட்டிகள் இவைகளுக்கெல்லையில்லை. யோசனை, ஆலோசனை, புனராலோசனை, மந்திராலோசனைகள் அளவில்லாமல் நடைபெற்றன. கடைசியாக, மரணதண்டனையை ஆயுள் பரியந்தம் சிறைவாச தண்டனையாய் மாற்றிவிடுவதென்ற முடிவுக்கு வந்தனர் அரசன் கருணை காட்டியது போலவுமிருக்கும். பணச் செலவும் குறையும்!

அரசனும் இந்த முடிவை அங்கீகரித்தான். ஆயுள் தண்டனை அடைந்தவனுக்குத் தகுந்த சிறைக்கூடம் ஒன்றைக்கண்டு பிடிப்பதுதான் பாக்கியாயிருந்தது. அந்த இராஜ்யத்தில்கொஞ்ச காலத்திற்கு மனிதர்களைக் காவலில்வைத்திருக்கக்கூடிய சிறு காவற்கூடம் ஒன்று இருந்தது. ஆனால் சிரந்தரமான உபயோகத்திற்குத் தகுந்த சிறைச்சாலை எதுவும் கிடையாது. தேடி அலைந்து கடைசியில் ஒரு கட்டிடத்தைக் கண்டு பிடித்தனர். குற்றவாளியை அதில் அடைத்து ஒரு காவலும் ஏற்படுத்தினார்கள். சிறைக்காவலன் கைதி ஓடிப்போகாமல் பார்த்துக்கொள்வதுடன், தினந்தோறும் அரண்மனையிலிருந்து அவனுக்கு உணவு கொண்டு வந்து கொடுக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஓராண்டு சென்றது. அரசன் ஒருநாள் அரசாங்க வரவுசெலவுக் கணக்கைப் பரிசீலனை செய்தான். சிறைக்கூட சிர்வாகத்துக்காக ஒரு புதிய செலவினம் ஏற்பட்டிருப்பதைக் கண்டு திடுக்கிட்டான். காவற்காரன் சம்பளம் உணவின் கிரயம் ஆகிய எல்லாம் சேர்ந்து ஒரு வருஷத்தில் 600 பிராங்குக்குமேல் செலவாகியிருந்தது. கைதியோ இளைஞன்; நோயற்ற சரீரமுடையவன். குறைந்தது இன்னும் ஐம்பது ஆண்டுகள் ஜீவித்திருக்கக்கூடும் கணக்குப் பார்க்க ஆரம்பித்ததும் இந்த ஏற்பாடு கட்டாது என்பது தெள்ளிதின் விளங்கிவிட்டது. அரசன் மந்திரிகளை அழைத்து நிலைமையை எடுத்துரைத்தான்.

மந்திரிகள் சபைகூடிப் புனராலோசனை செய்தனர். இறுதியாக அவர்களொருவரெழுந்து "காவற்காரனை நிறுத்தி விடவேண்டுமென்பது அடியேனின் தாழ்மையான அபிப்பிராயம்" என்றுரைத்தார் "நிரம்பச்சரி, ஆனால் கைதி ஓடிப்போய்விட்டால் என் செய்வது? என்று வினவினார் மற்றொருவர். "போனால் ஒழிந்து போகட்டுமே! சனியன் தொலைந்தது!" என்றார் முதலில் பேசியவர், அதுதான் சரியென்றார்கள் அனைவரும் அரசனும் சம்மதித்தான் காவற்காரனை வேலையினின்றும் நீக்கிப்போகச் சொல்லிவிட்டு, மேலே என்ன நடக்கப்போகிறதென்று பார்க்கும் பொருட்டு அனைவரும் ஆவலுடன் காத்துக்கொண்டிருந்தனர்.

சாப்பாட்டு நேரத்திற்குக் கைதி வெளியே வந்தான். காவற்காரனுக்காகச் சுற்று முற்றும் பார்த்தான்; காணவில்லை. நேரே அரண்மனைக்குச் சென்று தன் உணவைப் பெற்றுக்கொண்டு திரும்பிவந்து சிறைக்குள் புகுந்து கதவைச் சாத்திக்கொண்டு உள்ளேயே இருந்தான். மறுநாளும் இவ்வாறே நடந்தது. சரியான நேரத்திற்கு உணவு எடுத்துப் போக வந்துவிட்டான். எதிர்பார்த்தவண்ணம் ஓடிப்போகும் வழியைக் காணோம்

மறுபடியும் சபை கூடிற்று. "சிறையில் இனி வைத்திருக்க முடியாது என்று அவனிடம் வெளிப்படையாகச் சொல்லிவிடவேண்டியதுதான்" என்று தீர்மானித்துக் கைதியைக் கொண்டுவரச் சொன்னார்கள். கைதி வந்ததும் மந்திரிகளில் ஒருவன் "நீ ஏன் ஓடிப் போகவில்லை? காவற்காரனைத்தான் எடுத்துவிட்டோமே? உனக்கு இஷ்டமான இடத்திற்குப் போகலாம். அரசர் கவனிக்கமாட்டார்" என்றான்.

அப்போது அம்மனிதன் சொன்னதாவது:—"அரசர் கவனிக்க மாட்டார், உண்மையே. ஆனால் எனக்குப் போக்கிடமெங்கே? நீங்கள் எனக்குத் தண்டனை விதித்துத் தீராத அவமானத்துக்குள்ளாக்கி விட்டீர்கள். பொதுஜனங்கள் என்னை வெறுத்துத் தள்ளுவார்கள். எனக்கு வேலை செய்யும் பழக்கமும் போய்விட்டது. என் விஷயத்தில் நீங்கள் பெரிதும் அநீதி இழைத்துள்ளீர்கள். முதல் முதல், எனக்கு மரணதண்டனை விதித்தீர்கள். அதை நிறைவேற்றாமல் விட்டது ஒரு குற்றமே. நான் அப்போது குறை கூறினேனா? இல்லை. பின்னர் எனக்கு ஆயுள் பரியந்தம் சிறைத்தண்டனை விதித்து உணவு கொண்டுவந்து கொடுப்பதற்கு ஒரு காவற்காரனையும் கொடுத்தீர்கள். சிறிது காலத்திற்குப்பின், காவலனை எடுத்துவிடவே, உணவு கொண்டுவர நானே போகவேண்டியிருந்தது. நான் அப்போதும் புகார் சொல்லவில்லை ஆனால் இப்பொழுது என்னைப் போய்விடவே சொல்கிறீர்கள். இந்த அநீதிக்கு நான் ஒருநாளும் சம்மதிக்க முடியாது. நீங்கள் எது செய்தினும் நான் போக மட்டும் ஒருப்படேன்!"

கடைசி முறையாக மறுபடியும் சபை கூட்டப்பட்டது. அவனைத் தொலைத்துத் தலைமுழுகுவதற்கு ஒரே வழி உபகாரச் சம்பளம் கொடுத்து அனுப்புவதுதான் என்று முடிவு செய்து அரசனுக்கு அறிவித்தார்கள். "வேறு வழியைக் காணோம். எப்படியாவது அவனைப் போகச்சொன்னால் போதும்" என்றான் அரசன். வருஷந்தோறும் 600 பிராங்கு உபகாரச் சம்பளம் கொடுப்பதாகத் தீர்மானித்துக் கைதிக்கு அறிவித்தார்கள். "நல்லது, ஒழுங்காகப் பணம் கொடுத்துவரும் வரையில் நான் குறை சொல்லவில்லை இந்த நிபந்தனையின் பேரில் நான் போய்விடத் தயார்!" என்றான் அம்மனிதன்.

இந்தப் 'பெரிய' பிரச்னை இவ்வாறு முடிவடைந்தது. உபகாரச் சம்பளத்தில் மூன்றிலொரு பங்கு முற் பணமாகப் பெற்றுக்கொண்டு அம்மனிதன் அங்கிருந்து சென்றான். மொறுகோ இராஜ்யத்தின் எல்லைப்புறத்துக் கருகாமையில் கொஞ்சம் நிலம் வாங்கிக்கொண்டு தோட்டப்பயிர் செய்து சிம்மதியாய்க் காலங் கழிக்கலானான். தற்போது, ஆண்டுதோறும் சரியான காலத்தில் சென்று உபகாரச் சம்பளத்தைப் பெற்றுக்கொள்கிறான். பெற்றுக்கொண்டதும் சூது மண்டபத்திற் சென்று ஓரிரண்டு பிராங்கு பந்தயம் வைத்துவிட்டு வீட்டுக்குத் திரும்புகிறான். சமாதானத்துடனும் சௌக்கியமாகவும் வாழ்வுநடத்திவருகிறான்.

ஒரு மனிதனைச் சிரச்சேதம் செய்யவும், ஆயுட்கால முழுவதும் சிறையில் வைத்திருக்கவும் ஏற்படும் செலவுகளைப் பொருட்படுத்தாத ஒரு நாட்டில் பிறவாதது அவனுடைய அதிர்ஷ்டவசந்தான்! —நவசக்தி.

---

## விளம்பரம்.


ஒற்றுமை

சித்திரப் படங்களுடனும் (Illustrations) விநோதப் படங்களுடனும் (Cartoons) பிரதி மாதமும் வெளிவருவது தமிழுலகத்தில் இது ஒன்றே. சிறந்த கட்டுரைகளையுடையது. வருட சந்தா உள்நாடு ரூபா 1. வெளிநாடு ரூபா 1¼ மாதிரிப் பிரதி இனும்.

'ஒற்றுமை'ஆபீஸ், சைதாப்பேட்டை, மதராஸ்.
(H. 43)

சமையல் சௌக்கியம்.

இந்தியாவிலும் வெளிநாட்டிலும் புகழ்பெற்று விளங்கும்.

ருக்குமணி குக்கர்.

சமையல் அடுக்கை உபயோகிப்பவர்களுக்கே உண்டு முதல் 8 பேர்களுக்கு ஒரு மணிநேரத்தில் சொற்ப செலவில், தொந்தரவேயில்லாமல் சாதம் 5 கறிவகைகள் சமைக்கும். தனித்தவர்களுக்கும் குடும்பிகளுக்கும் வீட்டிலும் பிரயாணத்திலும் உபயோகம்.

1, 2, 4, 6, 8, பேருக்குரியது ரூபா 13, 18, 22, 27, 33-க் கிடைக்கும். தபாற்கூலி வேறு. விபரப் புத்தகம் இனும். ஏசண்டுகள் தேவை. உடனே எழுதுக.

ருக்குமணி குக்கர் கம்பெனி,
இராயப்புரம் (2) சென்னபட்டினம்.
(Y. 45)


---

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

—:O:—

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்மேற்கு செ. நா. லெ. லெட்சுமணஞ்செட்டியாரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி ஷை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்பட வேண்டிய நகைகளின் விபரம்.

1924-ம் ஆ. ஏப்பிரல்மீ

| நம். | டெ. | ரூபா. | ஊர் பெயர் நகைகளின் விபரம். |
|---|---|---|---|
| 75 | 20 | 15 | நுணுவில் கந்தையா ராமலிங்கம் பொன் கல்லுவைத்த டிம்மி பதக்கம் 1 |
| | | | மேமீ. |
| 106 | 7 | 65 | தாவடி ராமு செல்லையா பொன் பட்டணக்காப்புச்சோடி 1 |
| 117 | 12 | 110 | வண்கிழக்கு கந்தையா சுந்தரம்பிள்ளை பொன் பதக்கத்துடன் சங்கிலி அட்டியல் 1 சாதா கம்பிப்பூராணட்டியல் 1 |
| | | | ஜூன்மீ. |
| 156 | 5 | 100 | அளவெட்டி சின்னத்தம்பி தம்பிமுத்து பொன் பூக்காப்புச்சோடி 1 |
| | | | ஜூலைமீ. |
| 201 | 3 | 45 | கோண்டாவில் ஆறுமுகம் தம்பிப்பிள்ளை பொன் பட்டணக்காப்புச்சோடி 1 |
| 229 | 17 | 40 | சண்டிக்குளி ரப்பியல் யக்காசு பொன் சிறு சிங்கமுகக்காப்புச்சோடி 1 |
| 232 | 18 | 25 | கரையூர் நீக்கிலஸ் வெலுச்சோ பொன் சாதா சரட்டட்டியல் 1 |
| 233 | 19 | 50 | அல்லைப்பிட்டி பசுபதி செல்லத்தம்பி பொன் சாதா கம்பிப்பூராணட்டில் 1 |
| 256 | 29 | 8 | அல்லைப்பிட்டி பசுபதி செல்லத்தம்பி பொன் சாதா மோதிரம் 1 |
| 260 | 31 | 50 | பறங்கித்தெரு நீக்கிலாஸ் பிலிப்பு பொன் பட்டணக்காப்புச் சோடி 1 |
| | | | ஆகஸ்டுமீ. |
| 269 | 4 | 65 | கரையூர் யோசை வைஸ்தியாம்பிள்ளை பொன் அவல்மாலை 1 |
| 274 | 8 | 20 | பாசையூர் வைத்தி மிக்கேல் பொன் சிறுசட்டுக்காப்புச்சோடி 1 |
| 280 | 10 | 25 | பூனகரி சின்னத்தம்பி ராமலிங்கம் பொன் சாதா கைச்சங்கிலி 1 |
| 300 | 17 | 60 | ஓட்டுமடம் அம்பலவாணர் காசிப்பிள்ளை பொன் பட்டணகாப்புச் சோடி 1 |
| 329 | 28 | 160 | வண்மேற்கு முருகேசு ஐயாத்துரை பொன் பூக்காப்புச்சோடி 1 சாதா சங்கிலி அட்டியல் 1 |
| | | | செப்டெம்பர்மீ. |
| 352 | 4 | 55 | ரயில்வேஸ்டேஷன் முருகர் கந்தையா பொன் பட்டணக்காப்புச் சோடி 1 |
| 365 | 8 | 25 | காரைதீவு வைத்திநாதர் சண்முகம் பொன் அரும்புமணி 32 கோர்த்த கோர்வை 1 |
| 370 | 9 | 22 | சுதுமலை சுப்பிரமணியம் சின்னத்தம்பி பொன் சிறு தட்டுக்காப்புச் சோடி 1 |
| 371 | 11 | 40 | மண்டைதீவு சின்னத்தம்பி போம்பலம் பொன் சாதாக்கம்பிப் பூராணட்டியல் 1 |
| 374 | 12 | 55 | புங்குடுதீவு உலகநாதர் அம்பலவாணர் பொன் அச்சரக்கூடு ஒன்று கோர்த்த குண்டுச் சங்கிலி 1 சாதா மோதிரம் 1 |

விற்பனவு:— குரோதனஸு ஐப்பசிமீ 1வ. (17—10—25) சனிக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்டநகை பிறீக்கலாக மிகுதி ஷை கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்,
வெந்திஸ்மேஸ்தர்.

(Mis. 726)

---

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

—0—

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக்கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்மேற்கு க. சுப. கரு. பழனிசாமிப்பிள்ளை கடையில் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி ஷை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1924ஆ ஆகஸ்டுமீ.

| நம். | டெ. | ரூபா. | ஊர் பெயர் நகைகளின் விபரம். |
|---|---|---|---|
| 602 | 18 | 12 | நீராவியடி விஞாசித்தம்பி ஆறுமுகம்பொன் தாயித்துக் கூடு 1 |
| 618 | 21 | 50 | கச்சேரியடி சரவணமுத்து கதிரவேலு பொன் கம்பிப்பூராணட்டியல் 1 |
| 642 | 26 | 30 | வண்கிழக்கு சின்னத்தம்பி முருகையா பொன் சங்கிலி அட்டியல் 1 |
| 663 | 30 | 65 | ஆவரங்கால் கணபதிப்பிள்ளை வேலாயுதம் பொன் சங்கிலி அட்டியல் 1 இமிட் தோடு சோடி 1 |
| | | | செப்டெம்பர்மீ. |
| 677 | 1 | 35 | வண்கிழக்கு மருதப்பு மருதலிங்கம் பொன் கைச்சங்கிலி 1 |
| 682 | 2 | 80 | புங்குடுதீவு கந்தப்பு சுப்பிரமணியம் பொன் பட்டணக்காப்புச்சோடி 1 |
| 685 | 3 | 60 | நல்லூர் முருகர் சிற்றம்பலம் பொன் கம்பிப் பூராணட்டியல் 1 |
| 693 | 4 | 45 | சண்டிக்குளி சின்னத்தம்பி செல்லையா பொன் பருத்த சங்கிலிச்சோடி 1 |
| 720 | 8 | 60 | சூரியகுளம் இளையதம்பி மாணிக்கம் பொன் சிகப்புக்கல்டலர்கோர்த்த சங்கிலி 1 |
| 733 | 9 | 125 | கோண்டாவில் முருகர் மாணிக்கம் பொன் பருத்த சங்கிலிக்கொடி 1 |
| 740 | 13 | 80 | நீராவியடி கந்தர் சங்கரப்பிள்ளை பொன் பட்டணக்காப்புச் சோடி 1 |
| 755 | 14 | 70 | வேலணைகிழக்கு ஆ. இராமுப்பிள்ளை நடராஜா பொன் பட்டணக்காப்புச்சோ.1 |
| 776 | 18 | 120 | சேணியதெரு கதிரவேல் சின்னத்துரை பொன் இமிட் பதக்கத்துடன் சங்கிலி அட்டியல் 1 சாதா சங்கிலி அட்டியல் 1 சாதாமோதிரம் 1 |
| 786 | 21 | 10 | வண்கிழக்கு ஆறுமுகம் கந்தையா பொன் மூன்றுபட்டுமலர் கோர்வை 1 |
| 794 | 24 | 10 | குசவன்குளத்தடி சின்னத்தம்பி மாணிக்கம் பொன் இமிட்கல்லுவைத்தமோதிரம் 1 |
| 804 | 26 | 110 | கன்னாகம் சின்னி நாகலிங்கம் பொன் தாலியுடன் சங்கிலிக்கொடி 1 |
| 811 | 28 | 9 | வண்கிழக்கு பொன்னம்பலம் சண்முகம் பொன் வெள்ளைக்கல்மோதிரம் 1 |

விற்பனவு:—குரோதனஸு புரட்டாதிமீ 29வ (14-10-25) புதன் கிழமை காலை 10மணியளவில் எடுபட்டநகை புறநீக்கலாக மிகுதி ஷை கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்,
வெந்திஸ்மேஸ்தர்.

(Mis 724)

சொல்வதென்னவென்று புலப்படவில்லை. 'நான் நிரபராதியென்பது கடவுளுக்குத் தான் தெரியும்' என்றார். ஆனால் புரோகிதர் சொல்லு அச்சபையில் அந்த நேரத்திலே செல்லத்தக்கதன்று. இத் தப் பிராமணனை காட்டைவிட் டோட்டல் வேண்டுமென்று சபையோர் நிச்சயித்தனர். இதற்கிடையில் புரோகிதரைப் போன்றவர் இன்னொருவர் அச்சபையிலே வந்து தோன்றினர். சபையோரெல்லாரும் பேராச்சரிய மடைந்தனர்".

* * *

"பிந்திவந்த புரோகிதர் சபையோரைப் பார்த்து 'இங்கே நிற்கும் உங்கள் புரோகிதர் நிரபராதி; அவர் எனக்குத் தப்பியிருக்கவேண்டுமென்று மலைக் குகையுள் இன்று அதிகாலையிற் போய் ஒளித்திருந்தார். நானே இங்குள்ள அத்தப்புரத்திற்கு வந்து தகாதன செய்ய முயன்றேன். ஐபரை வருத்தாதீர்; நான் சனீஸ்வரன்' என்று கூறி மறைந்தார். அதன் பின் எல்லாரும் உண்மையை உணர்ந்து அதிக ஆச்சரியமுற்றார்கள். ஆதலால் மகனே, இவைகளெல்லாம் குருட்டு நம்பிக்கை, வீண் கட்டுப்பாடு என்று சொல்வது முழுத் தவறாகும். நீ தவறுமற் கோவிலுக்குப் போ" என்று தாய் சொல்லுதலும் மகன் "அம்மா, அறியாமையாற் சொல்லிவிட்டேன், குறை நினைக்கவேண்டாம்" என்று கூறி அன்னை சொற்படி கோயிலுக்குச் சென்றான்.

## சென்னைச் சட்ட நிருபண சபை

சென்னைச்சட்டநிருபணசபை அக்கிராசனாகப் புறுபெசர் இரத்தினசாமி அவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

## தற்கொலை.

வத்தகாமத்துக்குச் சமீபமான ஓரிடத்தில் பொலிஸ்காரனொருவன் மரத்திற் றூங்கி யிறந்துகிடக்கக்காணப்பட்டனன். மரணவிசாரணையில் அவன் தற்கொலைசெய்தனனெனத் தீர்மானிக்கப்பட்டனன்.

## மலைக்குளவி கடித்து மாண்டமை.

சென்றவாரம் நாவலப்பிட்டியிலே மார்க்கிறெற் என்னும் எட்டுவயதுச் சிறுமி ஒருத்தி வேறு மூன்று சிறுமிகளுடன் விளையாடிக்கொண்டு நின்றபோது தென்னமரத்திலிருந்து ஒரு தேங்காய்விழுந்தது. அம்மரத்தின் பக்கத்திலே ஒரு புறுக் கூடிருந்தது. அக்கூட்டினுள் ஒரு மலைக் குளவிக் கூடிருந்தது. தேங்காய் அக் கூட்டை இடறி, கூட்டின் ஒரு பாகத்துடன் நிலத்தில் விழ்ந்தது. விளையாடிக் கொண்டுநின்ற சிறுமியர் எல்லோரும் தேங்காயை எடுக்கும்பொருட்டு விரைந்தோடினர். மலைக்குளவிகள் அவர்களைத் துரத்துவதுகண்டு எல்லோரும் திரும்பி ஓடும்போது மார்க்கிறெற் என்னும் சிறுமி தடுமாற்றத்தினால் நிலத்தில் வீழ்ந்தனள். குளவிகள் அவளை வாருய்த்தாக்கின. அயலில் நின்றோர் அவளைத்தூக்கி வீட்டுக்குக் கொண்டுபோனார்கள். குளவிகள் அவ்வீட்டையும் முற்றிக்கையிடத் தொடங்கின. அவ்வீட்டிலுள்ள ஒரு கிழவியும் அதிகமாகத் தாக்கடபட்டனள் சிறுமி சிறிதுவேளையில் உயிர் துறந்தனள்.

## இரணைமடுக் கொலைவழக்கு.

இவ்வழக்குப் பின்னரும் சென்ற சனிக்கிழமை பருத்தித்துறைப் பொலிஸ்கோட்டில விசாரணைசெய்யப்பட்டது பொலிஸ் கோட்டு முதலியாரை ஒழிந்த ஏனைய எதிரிகள் எல்லாரும் நீதிஸ்தலத்துக்குக் கொண்டுபோகப்பட்டார்கள். நீதிபதி குறித்த முதலியாருக்கும் அம்பலவாணருக்கும் விரோதமாகக் கூறிய சாட்சியின் விபரத்தைச் சுருக்கமாக வெளியிட்டனர். மிஸ்ரர் எஸ். நடராசா, ஏ. நாகரத்தினம் என்னும் இருவரும் இரகசியப் பொலிஸ் பகுதிச் சார்ஜனால் சோதிக்கப்பட்டனர். நீதிபதியும் சார்ஜனும் சென்ற மேமீ 6-ம் 7-ம் தேதிகளில் வேலக்கைப் பிள்ளையார் கோவிலில் நிகழ்ந்த கலகத்தைப்பற்றிப் பல கேள்விகள் கேட்டனர். நீதிபதி வேலக்கைப் பிள்ளையார் கோவிலில் கலகம் நிகழ்ந்த இடத்தைக் காட்டும் ஒரு படத்தை வரைந்துகொண்டு வரும்படி வலிகாமம் மேற்கு மணியகாரனுக்கும், இரணைமடுக் காட்டில் பிரேதம் தூக்கப்பட்டிருந்தமையைக் காட்டும் ஒரு படத்தை வரைந்து கொண்டுவரும்படி கரைச்சி மணியகாரனுக்கும், பண்டாரக் குளத்தடியில் கொலைசெய்யப்பட்டமையைக் காட்டும் ஒருபடத்தை வரைந்துகொண்டுவரும்படி யாழ்ப்பாணம் பொலிஸ் பரிசோதகருக்கும் கட்டளைப்பத்திரம் அனுப்பினர். குறித்த வழக்கு வருகிற சனிக்கிழமைக்குத் தவணையிடப்பட்டிருக்கிறது. அன்று நாற்பது சாட்சிக்காரர் குறுக்குவிசாரணை செய்யப்பெறுவர்.

# எடுக்கப்படாமலிருக்கும் விதவைகள் அநாதப்பிள்ளைகளின் உபகாரச்சம்பளம்.

———:O:———

தங்களுக்குரிய உபகாரச் சம்பளத்தை அரசினரிடமிருந்து வாங்கிக்கொள்ளாத விதவைகள் அநாதப்பிள்ளைகள் ஆகிய இவர்களின் பெயர், சம்பளம் வாங்காத தேதி முதலிய விபரங்கள் கீழே வெளியிடப்பட்டிருக்கின்றன இந்த உபகாரவேதனத்தைப் பெற்றுவந்தவர்கள் யாராயினும் சீவந்தராயிருப்பின் அவர்கள் இயன்ற சீக்கிரத்தில் எமது கந்தோருக்கு எழுதித் தெரிவித்தல்வேண்டும்.

ஜோர்ஜ் ஈ பெறிரு,
காரியதரிசி,

விதவைகள் அநாதப்பிள்ளைகள் உபகாரவேதனம்பெறும் ஆபீஸ், கோழும்பு

Geo E. Pereira,
Secretary, W. & O. P. Office, Colombo.

| உபகாரவேதன இலக்கம் | விதவையின் பெயர். | உத்தியோகத்தரின்பெயர். | பார்த்த உத்தியோகம். | இன்ன திகதியிலிருந்து உபகாரவேதனம் எடுபடவில்லை. |
|---|---|---|---|---|
| 160 | சுறுப்பம்மாள் | A. சோலைமுத்து | பொலிஸ் 996 | 1— 2—1896 |
| 234 | கிரிமெனிக்கா | R. R. M. சப்புறுகாமி | பால் கட்டியவர் | 1— 6—1896 |
| 105 | வள்ளியம்மா | S. சவுரிமுத்து | பொலிஸ் 910 | 1898 |
| 440 | சச்சிகாமி | ரோமானிஸ் | பொலிஸ் 308 | 1— 8—1902 |
| 375 | அ நாகம்மா | முத்துச்சாமி | பொலிஸ் 101 | 1— 1—1903 |
| 474 | மார்க்கிறெற் | J. ஹனிபல்ஸ் | பொலிஸ் 197 | 1— 1—1904 |
| 284 | வள்ளிப்பிள்ளை | A. ஜேம்ஸ் | பொலிஸ் சார்ஜன் 831 | 1— 4—1904 |
| 117 | டோனுமடோனு | W. A. டிசில்வா | துறைமுக 'லாண்டிங் உவேயிற்றர்' | 1— 8—1905 |
| 538 | ஹெலின் சுலைவயினி | R. ஸ்கொற்வண்ட் | புகையிரதச் சாரதி | 1— 5—1907 |
| 91 | வள்ளியம்மா | முத்துச்சாமிப்பிள்ளை | பொலிஸ் 1344 | 1— 5—1908 |
| 369 | என்கெல்ரினு | அர்னோலிஸ்டி அல்விஸ் | லிகிதர் பிஸ்கால் கந்தோர் | 1— 5—1903 |
| 361 | கார்லயின் | P. L. பெர்னண்டோ | புத்தகங்கட்டுபவர் வித்தியாபகுதிக்கந்தோர் | 1— 8—1908 |
| 988 | அலையிஸ்லெஸ்லி | R. J. ஹென்டர்சன் | கப்பல்வழிகாட்டி கொழும்பு | 1— 9—1908 |
| 109 | அன்கில்ரின் | W. S. பெர்னண்டோ | புகையிரதப் பொக்கிஷசாலை லிகிதர் | 1— 6—1909 |
| 171 | அர்னோல்டினுடொரோதியா | J. C. பெறிரு | பகிரங்கவேலைப்பகுதி லிகிதர் | 1—11—1909 |
| 541 | செலஸ்தினுசாமி | R. பேர்னுட் | பொலிஸ் 1545 | 1— 6—1910 |
| 111 | வள்ளியம்மா | N. ஆறுமுகம் | பொலிஸ் 1273 | 1— 9—1910 |
| 574 | அன்னி | P. பஸ்ரியான்ஸ் | பொலிஸ் சார்ஜன் 99 | 1— 1—1911 |
| 1286 | எமிலிஇசபெலா | K. L. G. சில்வா | வைத்தியசாலையில் உதவி உத்தியோகத்தர் | 17—12—1912 |
| 555 | எலிசாகொர்நீலியா | E. W. வன்டோர்ற் | பொலிஸ் சார்ஜன் 3 | 1— 5—1913 |
| 362 | ஹெலின் எலிசபேத் | C. H. பக்ஸ் | கொழும்புப் பெரிய தபாற்கந்தோர் லிகிதர் | 1—10—1913 |
| 1321 | மரியாசோவிதபெர்னண்டோ | S. V. மச்சாடோ | சொக்கஸ்லையின் துறைமுகப்பகுதி விசாரணைக்கந்தோர் | 1—10—1913 |
| 1210 | ஹ்றியற் எலிசா | G. A. டயஸ் | உப வைத்தியசாலை உதவி உத்தியோகத்தர் | 1—12—1913 |
| 934 | ஹுயிலா | வில்லியம் டெக்கர் | தீபம் இடுபவர்(light keeper) | 1— 1—1914 |
| 1454 | மரியா அம்மா | செவரியாம் | புகையிரத உதவி உப காவலர் | 13— 8—1914 |
| 709 | டொனுஎன்கெல்ரினுஹமினி | D. S D. அறன ஆராய்ச்சி | பகிரங்கப்பகுதித் தண்ணீர் காவல் | 1— 9—1914 |
| 1380 | ஜோஸ்லின் | C. W. பெரிரா | இராணிமாளிகைத் தளபாடம் பார்ப்பவர் | 1—10—1914 |
| 713 | அன்னக்குட்டி | S. ஆரோக்கியம் | பொலிஸ் 506 | 1— 1—1915 |
| 687 | டொனுகதரயின் | C. S. கோர்ணஸ் | பொலிஸ் 973 | 1— 2—1915 |
| 305 | யூக்கினி | H. C. கிறே | ஐரோப்பிய பொலிஸ் | 1— 3=1915 |
| 1446 | உக்குமெனிக்கா | V. அப்புகாமி | பொலிஸ் 717 | 13— 3—1915 |
| 685 | அன்னப்பிள்ளை | V. சின்னத்தம்பி | யாழ்ப்பாணக் கச்சேரித் தவிபாஷிகர் | 1—11—1915 |
| 799 | அமிர்தம் | K. சுப்பிரமணியம் | புகையிரதப்பகுதி லிகிதர் | 1—12—1915 |
| 1487 | ஜீலியா அடல்பினு | E. செதிங்டன | தீபம் ஏற்றுபவர் (Light Keeper) | 1— 1—1916 |
| 339 | சின்னுச்சி | K. ஆறுமுகம் | பொலிஸ் 826 | 1— 8—1916 |
| 1488 | மாரியா இஸ்பெல்கதரயின் | K. M. பன்னுந்து | தலைமைப் பதிவுகந்தோர் லிகிதர் | 1— 1—1917 |
| 1116 | மடிலயின் | S. ஜோசி | பொலிஸ் 359 | 1— 2—1918 |
| 666 | தங்கம்மா | C. நாராயணசாமி | அப்போதிக்கரி | 1— 4—1918 |
| 690 | சலாராபிரோதியா | R. H. பெறிரு | காணிப்பதிவு கந்தோர்த் தலைவர் | 1— 5—1918 |
| 734 | மீனாட்சி | அப்பாசாமி | பொலிஸ் 817 | 1— 5—1918 |
| 944 | அக்னிஸ் | D. N. டொன்பஸ்தியான் | சுப்பிறிங்கோட்டுக் கட்டியகாரன் | 1— 5—1918 |
| 119 | மடிலினுகோனுச்சி | டொன்பாபாஅப்பு | பொலிஸ் 871 | 1— 7—1918 |
| 959 | அம்மான் அம்மா | M. S. சுப்பராமன் | யாழ்ப்பாணக் கச்சேரி லிகிதர் | 1— 7—1918 |
| 1709 | லீலாகுமரிஹாமி | ஜோர்ஜ்டீ சில்வா | கொழும்புப் பொலிஸ் கோட் கொப்பித்தலைவர் | 3— 8—1918 |
| 909 | றபெக்கப்பிள்ளை | S. இசாய்க்கஸ் | அனுராசபுரக் கச்சேரிக் கொப்பித்தலைவர் | 1—10—1918 |
| 33[illegible] | சார்லொற்றி | L. டன்டசேகர | தம்பளைக் கோட்டுத் தலைமை லிகிதர் | 1—11—1918 |
| 384 | டொன்னுயோகனு | C. பெறிரு | ரேகு உத்தியோகத்தன் | 1—11—1918 |
| 397 | தெய்வானைப்பிள்ளை | A. I. இரகுநாதர் | மணியகாரன் | 1— 1—1919 |
| 1601 | டொனுமார்தினு | P. யோசேப் பெறிரு | "கொலோனியல் ஸ்ரோர்ஸ் ஓவசியர்" | 1—1—1919 |
| 502 | கார்லினு | G. பெறிரு | பொலிஸ் 1511 | 1—3—1919 |
| 975 | எலிசபேத்ஹிறேஸ் | P. S. விஜயசிங்க | டக்டர் | 1—4—1919 |
| 1448 | தங்கமுத்து | A. W. வெற்றிவேலு | வதுளை டிஸ்திறிக்கோட்டுத் தவிபாஷிகர் | 1—6—1919 |
| 90 | வள்ளியம்மா | K. சின்னையா | பகிரங்கவேலைப்பகுதி லிகிதர் | 1—7—1919 |
| 544 | மீனாட்சி | ஆறுமுகம் | பொலிஸ் 1261 | 1—8—1919 |
| 833 | டிமிங்கா | A. M. D. கொர்னேலிஸ் | முகத்துவாரச்சிறைச்சாலை உப ஓவசியர் | 1—8—1919 |
| 1651 | அன்னி | R. F. குறே | பரிசோதனைக்கந்தோர் லிகிதர் | 1—8—1919 |
| 1828 | ஜெருசானு | L. De. சில்வா | பதிவுகந்தோர்த்தலைவர் | 12—3—1919 |
| 24 | ரிக்கிறிமெனிக்கா | S. M. அப்புகாமி | பொலிஸ் 743 | 1—9—1919 |
| 1209 | அன்னக்குட்டி | S. றல்லைக் | உதவிக்கொலோனியல் சேர்ஜன் | 1—8—1920 |
| 996 | அன்னமுத்து | ஆச்சிநாதன் | பொலிஸ் 1157 | 1—10—1920 |
| 1984 | கார்லினகாமி | ஹிறிக்கொறிஸ் பெறிரு | பொலிஸ் சார்ஜன் 1587 | 2—11—1920 |
| 53 | ஆசி ஆச்சிப்பிள்ளை | B. ஹிறெக்ஹறி | பொலிஸ 78 | 1—12—1920 |
| 136 | நாகமுத்துப்பிள்ளை | V. விசுவநாதபிள்ளை | ஊர்காவற்றுறைப்பொலிஸ்கோட்டுத்தலைமைலிகிதர் | 1—12—1920 |
| 22 | மிக்கலா | D. H. De. பொன்சேக | பதிவுகந்தோர் லிகிதர் | 1—3—1921 |
| 1121 | பெரியநாயகம் | A. கண்ணப்பன் | நீர்ப்பாய்ச்சற் பகுதிலிகிதர் | 1—4—1921 |
| 1167 | லூசிடோறு | J. S. குணசேகரா | உப உதவிக் கொலோனியல் சேர்ஜன் | 1—5—1921 |
| 1531 | அபிஅப்பா | R. கந்தப்பா | மட்டக்களப்புக் கச்சேரிச்சிறுப்பர் | 1—7—1921 |
| 900 | தெய்வானைப்பிள்ளை கயிலாபர் | S. சத்திவேற்பிள்ளை | புகையிரதப்பகுதி ஸ்தானத்தலைவர் | 1—10—1921 |
| 481 | போலினு | B. அன்டூறு | தீபம் ஏற்றுபவர் | 1—4—1922 |
| 2095 | தெபுறுமாயி பூஞ்சிகோனு | J. A. அப்புசின்னோ | "ரேண்கொக்" C. W. W. | 1922 |
| 1109 | கோனுசாமி | அன்ரோனிஸ் அப்பு | தண்ணீர்த்தொட்டிக் காவற்காரன் | 1—7—1923 |
| 1918 | டொனுமாரிகாமி | B. A. A. பெறிரு | சிறைச்சாலை உப ஓவசியர் | 1—9—1923 |
| 1503 | ஜெலினு மார்க்கறற் | E. A. ஜெயவிக்கிரம | மூன்றும்வகுப்பு அளவைகாரன் | 1—5—1917 |
| | பிள்ளைகள்:— | —,,— | | |
| | ஜெலினு மஜோரி பிறந்த திகதி | 10—4—1904 | | |
| | சாமுவேல் ஹிறுபேட் | 14—9—1908 | | |
| | க்ளேரலின் கதலீன் | 9—3—1912 | | |
| | கிளாறின்ஸ் மார்க்கிறெற் | 21—7—1913 | | |
| 1986 | பிள்ளைகள்:— | | | |
| | சண்முகம் | 8—3—1913 | தகப்பன் மதிப்புத்தமுதலியார் K. தம்பையா | 1—12—1922 |
| | சிவப்பிரகாசம் | 9—1—1915 | | |
| | கைக்குழந்தை | | | |
| | மேரி ஈதெல் | 15—6—1907 | தகப்பன்சிறைச்சாலைஓவசியர் F. S. பெர்னண்டோ | 1—6—1923 |
| | (G. 555) | | | |

### அஷ்டபந்தனமருந்து.

இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சுத்தமான சரக்குகளைக் கொண்டு செம்மையாகச் செய்யப்பட்ட (சுவாமிக்குச் சாத்தும்) அஷ்டபந்தனமருந்து எம்மிடத்தில் விலைக்கிருக்கிறது.

முத்தல் ஒன்றின் விலை ரூபா 5.

சு. வைத்தியநாதக்குருக்கள்,
சிவன்கோவில்,
வண்ணார்பண்ணை.

(M. 37)

### சேலம் ஜவுளிதினிசுகள்.

எங்களிடம் சொந்தத் தறிகளில் நெய்யப்பட்ட பட்டுத்தினிசுகளும், பட்டும் பருத்தியும் கலந்த தினிசுகளும், தாளம்பூக்கரைப் புடைவைகளும், வெள்ளை ஜவுளி தினிசுகள், குண்டஞ்சு, சன்னஞ்சு, பவுன்பேட்டு, இன்னும் பல மாதிரிகள் இருக்கிறது. விலாசம்தெரிவித்தால் பிறைஸ் லீஸ்ட் இலவசமாய் அனுப்புகிறோம்.

விலாசம்:

கோ. ப. சி. அ. வேணுகோபால்செட்டியார்
அன்ட் பிறதர்ஸ்,
ஜவுளி & கமிஷன் ஏஜண்டு,
குகை, சேலம். S. I.

தந்தி விலாசம்: வேணுகோபால், சேலம்.

(H. 32.

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டனைச் சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவுபிடிக்கும் யாழ்ப்பாணம் வண்கிழக்கு பெரி. லெ. மு. ம. சோமசுந்தரஞ் செட்டியாரிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி ஷை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்பட வேண்டிய நகைகளின் விபரம்.

1924-ம் ஆ ஏப்பிரல்மீ

| நம். | திக. | ரூபா. | ஊர் பெயர் நகைகளின்விபரம். |
|---|---|---|---|
| 1821 | 6 | 125 | வேலணை வ. முருகேசு கந்தையா பொன் பட்டணக் காப்புச் சோடி 1, நசிந்த கம்பிப்பூரானட்டியல் 1 |
| 1849 | 23 | 27 | சண்டிக்குளி யாக்கோபு சாமுவேல் பொன் சிறுதட்டுக்காப்பு சோடி 1, இமிட்டேசன் மோதிரம் 1, சட்டைப்பின் சங்கிலி 1. |
| 1858 | 29 | 50 | ஆரியகுளத்தடி ஆறுமுகம் தம்பு பொன் திருக்கண்டமாலை 1 |
| மேமீ | | | |
| 1866 | 5 | 45 | வண்மேற்கு செல்லம் அய்யாத்துரை பொன்திருகில்லாத கம்பிப்பூரானட்டியல் 1 |
| 1874 | 8 | 50 | புங்குடுதீவு ஆறுமுகம் நாகமுத்து பொன் ஒருபக்கம் சுரையில்லாத பழுது தாயித்துடன் முறுக்குச் சங்கிலி 1 |
| 1903 | 22 | 20 | ஆனைக்கோட்டை சின்னத்தம்பி ஆறுமுகம் பொன் சிறு தட்டுக்காப்புச் சோடி 1 |
| 1904 | 22 | 50 | கல்லூர் முருகர் சின்னையா பொன பட்டணக்காப்புச் சோடி 1 |
| 1913 | 24 | 166 | வண்கிழக்கு முருகர் சின்னத்தம்பி பொன் பீலிக்காப்புச் சோடி 1, உடைந்த மருக்கன் சிகப்புப் பதக்கத்துடன் கம்பிப்பூரானட்டியல் 1, இமிட்டேசன் காதோலை சோடி 2 |
| ஜூன்மீ | | | |
| 1929 | 3 | 140 | வண்மேற்கு கதிர்காமர் கந்தையா பொன் குண்டுச் சங்கிலி 1, எஸ் வளையல் சோடி 1, டைமன் வளையல் சோடி 1 |
| 1945 | 11 | 20 | அராலி குமாரசாமி நாகலிங்கம் பொன் சிறுபிள்ளை தட்டுக்காப்புச் சோடி 1 |
| 1963 | 22 | 20 | சோனகதெரு சேகு முகையதீன் மீராய்சாகிபு பொன் தட்டுக்காப்புச் சோடி 1 |
| ஜூலைமீ | | | |
| 2019 | 19 | 15 | நல்லூர் வல்லிபுரம் செல்வரத்தினம் பொன் இமிட்டேசன் சிகப்பு நீலவெள்ளை கட்டிய காதோலை சோடி 1 |
| 2034 | 28 | 100 | வண்கிழக்கு காசிப்பிள்ளை விசுவப்பா பொன் கொலுசுக் காப்புச் சோடி 1, இமி. சிகப்புப்பச்சை கட்டிய கவுத்தோர் 1, வெள்ளிப் பாதசரம் சோடி 1 |
| 2044 | 31 | 20 | சோனகதெரு முகமது முகையதீன் அசனர் திருகில்லாத இளக்கப் பொன கொலுசுக்காப்புச் சோடி 1 |
| ஆகஸ்டுமீ | | | |
| 2059 | 6 | 60 | கொக்குவில் அப்பாக்குட்டி செல்லையா பொன் பட்டணக்காப்புச் சோடி 1 |
| 2069 | 8 | 25 | மானிப்பாய் மதியாபரணம் சின்னத்துரை பொன சிகப்பு நீல வெள்ளை கட்டிய காதோலை சோடி 1 |
| 2084 | 11 | 35 | கரையூர் சின்னத்தம்பி கதிர்காமு பொன் சிகப்பு நீலவெள்ளை கட்டிய காதோலை சோடி 1, இமி. சிகப்பு மோதிரம் 1, குருசு 1 |
| 2095 | 14 | 100 | செம்மாதெரு சுல்தான் முகையதீன் கண்டு டிம்பிப் பதக்கமில்லாத பொன் செட்டிப் பூரானட்டியல் 1 |
| 2106 | 17 | 35 | கசேரிபடி கணபதிப்பிள்ளை இராமலிங்கம் பொன் திருகில்லாத கம்பிப்பூரானட்டியல் 1 |
| 2108 | 17 | 40 | கைதடி அம்பலவாணர் இராமலிங்கம் பொன் கம்பிப்பூரானட்டியல் 1 |
| 2127 | 23 | 50 | தட்டாதெரு சின்னத்தம்பி துரை அஸ்ட்டேலியா பவுண் 2, செடி அரைப்பவுண் 3, குதிரை அரைப்பவுண் 1, |
| 2128 | 23 | 60 | சுன்னாகம் இளையதம்பி நாகனுதர் பொன் பட்டணக்காப்பு சோடி 1 |
| செப்டெம்பர்மீ | | | |
| 2148 | 1 | 70 | வண்மேற்கு வல்லிபுரம் கந்தையா பொன் சுரை திருகில்லாத சிறு செட்டிக் கொலுசு சோடி 1, குதிரைப்பவுண் ஒன்றுடன் கழுத்துச்சங்கிலி 1 |
| 2157 | 3 | 50 | கொக்குவில் அப்பாக்குட்டி செல்லையா பொன கம்பிப்பூரானட்டியல் 1 |
| 2160 | 3 | 120 | வண்மேற்கு வல்லிபுரம் கந்தையா பொன் சிகப்பு நீல வெள்ளை கட்டிய டிம்பிப் பதக்கத்துடன் சங்கிலி அட்டியல் 1 |
| 2189 | 14 | 60 | சின்னக்கடை சண்முகம் நமசிவாயம் பொன் கம்பிப் பூரானட்டியல் 1 |
| 2201 | 17 | 60 | தாவடி முருகேசு சுந்தரம் பொன பழுது கம்பிப்பூ ரானட்டியல் 1, அச்சுக்கட்டை மோதிரம் 1 |
| 2217 | 25 | 20 | சோனகதெரு அப்துல்காதர் சுல்தான் கண்டு பொன் அலுக்கொத்து 26 |
| 2222 | 28 | 50 | சோனகதெரு மெயிஞ அப்பா முகைதீன் சாய்பு பொன் சவடிக் கொடி 1 |

விற்பனவு:—குரோதனஞு புரட்டாதிமீ 27உ (12-10-25) திங்கட்கிழமை காலை 10 மணி-பளவில் எடுபட்டநகை பிறகேலாக மிருதி வண். மேற்கு ஷை கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. அய்யம்பிள்ளை உடையார்,
வெர்திஸ்மேஸ்தர்.

(Mis. 723.)

## அதிசிரேஷ்டமான தைலம்.


காரகண்டிப்பான மனுஷனோ ஸ்திரீயோ சரியென மதிக்கும்படியான அநேக முக்கிய சாக்குகள் சேர்ந்த தைலம்

### லிட்டில்ஸ் ஓரியன்றல் பாம்.

இதர தைலங்களைவிட இது ஏன் சிரேஷ்டம்?

1. நோவைக் குணமாக்கும் 12 திவ்விய சரக்குகள் சேர்ந்தது.
2. அவைகளின் சாரத்தை அது தன் திட—திராவ மூல காரணத்திலடக்கி வைத்திருக்கிறது.
3. அதில் வீணுய்ப்போகும் தன்மையே கிடையாது. தினையளவு தைலம் பனையளவு குணத்தைத்தரும்.
4. அதில் அன்னியபொருள் சேர்ப்பில்லை.
5. அதில் மிருகக்கொழுப்பேயில்லை.
6. அது குணஞ்செய்யும் குணமுடையது.

3—L—25.




(Y. 41. A.)

## அடைவுநகைவிற்பனவு விளம்பரம்.

—:O:—

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக்கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவுபிடிக்கும் யாழ்ப்பாணம் வண்-மேற்கு கொட்டடி மா. கு. தண்டாயுதபாணியிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி ஷை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1924-ஆ செப்டெம்பர்மீ

| நம். | திக. | ரு. | சத. | பெயர் ஊர் நகைகளின்விபரம் |
|---|---|---|---|---|
| a891 | 5 | 8 | | க. செல்லையா மானிப்பாய் சிறுகாப்பு 2 |
| 972 | 8 | 7 | 50 | சி. பொன்னம்பலம் மண்டைதீவு பொன் தோடு 2 |
| 1015 | 10 | 20 | | மீ. முகமது அப்துல்காதர் சோனகதெரு மோதிரம் 1 |
| 1023 | 10 | 35 | | க. நாகேந்திரம் மன்கும்பான் கைச்சங்கிலி 1, மோதிரம் 1 |
| 1036 | 11 | 6 | | சின்னப்பிள்ளை கொட்டடி கட்டை கம்பி ஒலை 2 |
| 1136 | 16 | 7 | | கு. கந்தசாமி கொட்டடி சிறுகாப்பு 2 |
| 1150 | 16 | 5 | 32 | க. கந்தையா கொட்டடி அச்சரக்கூடு 1 |
| 1235 | 20 | 9 | | மீ. அசனுமரக்காயர் சோனகதெரு சிறுகாப்பு 2 |
| 1286 | 23 | 15 | | சி. இளையதம்பி அச்செழு குப்பிக்கடுக்கன் 2 |
| 1294 | 24 | 44 | | சி. கந்தன் கொட்டடி அட்டியல் 1 |
| 1337 | 26 | 12 | | ஆ ப அப்துல்காதர் சோனகதெரு சிறுகாப்பு 2 |
| 1340 | 26 | 32 | 03 | M S. அர்ஆமிட் பொலிஸ் லையின் அரைப்பவுண் 5 |
| 1351 | 27 | 15 | 03 | சே. சின்னத்தம்பி சோனகதெரு வெள்ளி பாதசரம் 2 |
| 1390 | 28 | 13 | | மு. கந்தப்பு கன்னாதிட்டி அச்சரக்கூடு 1, கொப்பு 1 |
| 1406 | 29 | 30 | 03 | க. சிதம்பரப்பிள்ளை ஆனைக்கோட்டை தங்கப் பவுண் 3 |
| a1427 | 29 | 8 | | ம. அப்துல்காதர் சோனகதெரு மணிக்கோர்வை 1 |
| 1436 | 30 | 18 | | அ. முகைதின் பிச்சை சோனகதெரு வெள்ளி பாதசரம் 2 |
| 1440 | 30 | 6 | | கா. விஞயமூர்த்தி மண்டைதீவு வாளி 2, கடுக்கன் 2 |
| 1441 | 30 | 8 | | மு. சிற்றம்பலம் நல்லூர் குப்பிக்கடுக்கன் 2 |
| 1450 | 30 | 6 | | மு. பீர்முகம்மது சோனகதெரு பூசாந்திரம் 1 |

விற்பனவு:—குரோதனஞு புரட்டாதிமீ 25உ (10-10-25) சனிக்கிழமை காலை 10மணியளவில் எடுபட்டநகை புறநீங்கலாக மிகுதி ஷை கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்,
வெர்திஸ்மேஸ்தர்.

(Mis 722)

அநேக பரிசுகளும் தங்கமெடல்களும் நற்சாக்ஷிகளும் பெற்று உலகப் பிரசித்தி அடைந்திருப்பதோடு 25-8-23-ல் சென்னையில் நடந்த வைத்திய கான்பரன்ஸ் அண்டுமருந்துக் கண்காட்சியில் இவர் மருந்துக்கள் பஸ்ட்கிளாஸ் (முதல்தர) தேவ ஔஷதங்களெனத் தங்க மெடலும் வைத்தியபதி என்ற பட்டமும் பெற்றவர்.

### குஷ்டரோகிகளே!

நீங்கள் இனி இந்த நரக வேதனையில் அழுந்தாமல் மன உல்லாசமாக இருக்கலாம்.

பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதம்.

## நமது தாம்பிர பஸ்பத்தின் மகத்துவம்.

நிராதெனக் கைவிடப்பட்ட அநேக குஷ்டரோகிகளை சௌக்கியப்படுத்தி விட்டது.

திமிருடன் உள்ள குஷ்டம், குறைநோய், தடிப்பு, அரிப்பு, கை கால் சுரணையற்று காது, மூக்கு, உதடு, கை கால் சுரவையுள்ள பெருநோய் உள்ளவர்களும் கண்சிவந்து வாய் மூக்கில் துர்வாடை வீசும் மூக்கு அழுகிய அசாத்திய ரோகமுடையவர்களும் சரீரமே ரணமாகி விரல்கள் அழுகிப்போன ஆறாத ரணங்களும், வெள்ளை, வெட்டை, மொழிகளில் குலை, வீக்கம், வலி கை கால் குடைச்சல், கிரந்தி, நமைச்சல், மேகஊரல், பத்து, அரிகிரந்தி, தடிப்பு நரம்பு பிடித்துக்கை காலை முடக்கிவிடும் மேகவியாதிகளும், வெண்மேகம், செம்மேகம், கருமேகம் முதலிய சகலவித கர்ம வியாதிகளுக்கும்,

## நமது தாம்பிர பஸ்பம்.

### சாப்பிடுங்கள்.

முப்புவினுல் தளுக்கற நீற்றியது; களிம்பற்றது; வாந்தி முதலிய கேடுகள் ஒன்றும் செய்யாது. பத்தியமில்லை. வியாதிகளை விவரமாய் எழுதவும்.

80-வேளை பஸ்பம் ரூபா 40. 40-வேளை பஸ்பம் ரூபா 20.
20-வேளை ரூபா 10 ஏழைகள் என்று எழுதினுல் பாதிவிலைக்கு அனுப்பப்படும்.

காந்தி! தேஜஸ்!! பலம்!! தீர்க்காயுள் சந்தானவிர்த்தி,
அடையப் பிரியப்படுகிறீர்களா! அப்படியானுல் பழனி, T. R. K.

## தங்கபஸ்பம். சாப்பிடுங்கள் (பஸ்பத்தின் மகிமை).

"முடியாத பற்பமது குன்றியுண்ண் முனையான காயமது சிவந்து மின்னும்
பிடியாத மதயானைப் பெலனுக்கொக்கும் ............"

என்ற இக்கவியால் பஸ்பத்தின் பெருமை நன்கு விளங்கும். அபார சக்தி வாய்ந்தது. ஜீரண சக்தி, பசி, ரத்தவிர்த்தி உண்டாக்கும். இந்திரிய விருத்தியும் இந்திரிய புஷ்டியும் கொடுத்து ஊக்கத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை.

பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதம்.

100-நாள் பஸ்பம் ரூபா 35. 50-நாள் பஸ்பம் ரூபா 20. 25-நாள் பஸ்பம் ரூபா 10., 10நாள்கு 5.

## நீரழிவுக்கு ஆப்ரேக் செந்தூரம்.

சால்திபோகும் நீரை நிறுத்தும், தாகத்தைக் குறைக்கும், நீரிலுள்ள சர்க்கரையையும்சரீர வெளுப்பையும் மாற்றி தேஜஸ் பலம் மாகடுக்கும். இதோ ஒருமருந்துக்கும் வரப்படாத வியாதி இந்தமருந்தில் தீருவது வெகு ஆச்சரியமா இருக்கிறது. இப்படி சிரேஷ்டமான மருந்து இதுவரை வெளிவரவில்லை.

40-நாள் மருந்து ரு. 20, 20-நாளுக்கு ரு. 10. அனுமான ஆவரை நிருதம் 80 உருண்டை ரு. 10.

## தாளக பஸ்பம்.

எவ்வளவு நாட்பட்ட காசம் க்ஷயம், ஈளை, இருமல், ஷ்ட சுவாசம், கோழை, சபக்கட்டு அலசியம் தீரும். புட்டி ரூபா 4.

## நாக பஸ்பம்.

சீழ் மூலம், ரத்தமூலம், மூலமுளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் வெகு சீக்கிரம் குணமாகும். ஆப்ரேஷன் தேவையில்லை புட்டி ரூபா 4.

## பிரமேக நிவாரணி.

ஒரேவேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும், பொறுக்கமுடியாத வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், சுதிமேகம் உடனே நிற்கும். புட்டி ரூபா 2.

## இதோ? ரசமணி.

பூஜைக்குகந்தது வாசிதம்பிக்கும் சகல வசியம், தனலாபம், கீர்த்தி, நினைதகாரியசித்தி, தொழிலபிவிருத்தி, புத்திரசந்தானம், மென்மேலும் பெருகும், தொத்துநோய் தவிருத்து மேகபற்று, சொரி சிரங்கு முதலியவை தீரும். மணி 1-க்கு ரூபா 2. 6-மணி ரூபா 10-0:0.

எந்த மருந்துக்கு ஆர்டர் செய்தாலும் கடிதம் எழுதும்போது விவரமாய் நிரேக கூறுகளைத் தெரிவிக்கவும், பினங்கு, சிங்கப்பூர்த்தேசவாசிகள் முன்பணம் அனுப்பவும்.

வைத்தியபதி, டி. ஆர். கருப்பணபிள்ளை,
ஆயுள்வேத வைத்தியசாலை, பழனி.

(Q. 56 B)

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by Pandit V. T. Sambandhan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.